www.eelamview.com

# விடுதலைப்புலிகள்

குரல் 15 | ஆனி 1990 | அன்பளிப்பு: 5 ரூபா

# தமிழீழத்தில் இனப்படுகொலை தொடர்கின்றது.....

***சிங்கள இனவெறி இராணுவம் மீண்டும் தமிழ்இன அழிப்பு நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளது. எம்முடன் பேச்சுவார்த்தை நடாத்திக்கொண்டே எமது இயக்கத்திற்கும் மக்களுக்கும் எதிராக இராணுவரீதியான தயாரிப்பு நடவடிக்கைகளை சிறீலங்கா அரசு செய்து கொண்டிருந்தது.***

மாவட்டத்திற்கு ஒன்று அல்லது இரண்டு படைமுகாம்கள் இருக்கலாம் என்றும் மற்றயவைகள் அகற்றப்பட வேண்டும், என்று இரு பகுதியினரும் கண்ட இணக்கத்துக்கு மாறாக இராணுவ முகாம்களை அகற்றுகின்றோம் எனக் கூறிக்கொண்டு அம்முகாம்களைப் பலப்படுத்துவதிலேயே ஸ்ரீலங்கா அரசு கண்ணும் கருத்துமாக இருந்தது.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்தும் நடந்து கொண்டே இருந்தது.

வட - கிழக்குப் பகுதிகளிருந்த காவல் நிலையங்களிலிருந்து (பொலிஸ்) சிங்களவர்களை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக தமிழ், முஸ்லீம், இளைஞர்களை நியமிக்கும்படி நாம் விடுத்த கோரிக்கையை ஏற்பதாகக் கூறிவிட்டு அதற்கு மாறாக காவல் நிலையங்களை இராணுவமுகாம்களாக மாற்றும் செயல் முறைகளிலேயே ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

இயந்திரத் துப்பாக்கிகள் (எல். எம். ஜி), ரி81, ரி56, 84 - எஸ் மற்றும் சிங்கப்பூரில் செய்யப்பட்ட நவீன ஆயுதங்கள் காவல்த் துறையினருக்கு வழங்கப்பட்டிருந்தன.

குறிப்பாக கிழக்குமாகாணத்திலிருந்த காவல் நிலையங்கள் அனைத்துமே சிங்கள காவல்துறையினரைக் கொண்ட இராணுவ முகாம்களாகவே மாற்றப்பட்டுக் கொண்டிருந்தன.

விசேட இராணுவப் பயிற்சிகளைப் பெற்று முன்னர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் இனப் படுகொலை புரிந்த எஸ் ரி. எவ் எனப்படும் அதிரடிப் படையினர் காவல் துறையினரின் (பொலிசின்) சீருடையை அணிந்தபடி காவல் நிலையங்களில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இவற்றை எல்லாம் ஒப்பு நோக்கிப் பார்க்கும் போது தமிழ் பேசும் மக்களை இனப்படுகொலைக்குள்ளாக்குவதற்காக ஒரு சந்தர்ப்பத்தை ஸ்ரீலங்கா படைகள் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

இவ்விதம் சிங்கள அரசானது படிப்படியாக தன்னை ஒரு யுத்தத்துக்காகத் தயாரித்தபடி எமது இயக்கத்தை சீண்டியது. இதன் ஓர் அங்கம் தான் மட்டக்களப்பு காவல் நிலையத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமாகும்.

இந் நிலையில்தான் நாம் ஓர் அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டு தமிழீழத்தில் இருந்த அனைத்து காவல் நிலையங்களையும் கைப்பற்றி அங்கிருந்தவர்களின் ஆயுதங்களைக் களைந்தோம்,

காவல் நிலையங்களை படைமுகாம்களாக கட்டியெழுப்பியபின் எமது இயக்கத்தின் மீது திடீரெனப் பாய்ந்து தாக்கத் திட்டம் தீட்டியிருந்த சிறிலங்கா அரசிற்கு நாம் காவல் நிலையங்கள் மீது முந்திக் கொண்டு நடவடிக்கை எடுத்தது ஏமாற்றத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது.

இதன் பின் திரு. பிரேமதாசாவின் அரசு முப்படைகளையும் எம்மீதும், எமது மக்கள் மீதும் ஏவிவிட்டது இந்த நிலையில்தான் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனைப் பகுதியில் சிங்களப் படைகளுக்கும் எமது இயக்கத்திற்குமிடையில் மோதல் தொடங்கியது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதற்தடவையாக சிங்கள இராணுவ முகாம்களைத் தாக்கிமுற்றாக அழித்து அங்கிருந்த இராணுவத்தினரை விரட்டியடித்தோம்.


★ மட்டக்களப்பு மாவட்டத்தில், கல்குடா இராணுவ முகாமையும்,

★ அம்பாறை மாவட்டத்தில் கல்முனை வாடி வீடு இராணுவ முகாமையும்,

★ திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா. கிரியாய்,

(15ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் மகளிர் மாநாடு




விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ஓர் அங்கமான விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் பொதுச்சபைக் கூட்டம் வைகாசி மாதம் 27, 28, 29ம் திகதிகளில் யாழ்நகரில், வின்சர் படமாளிகை அரங்கில் நடைபெற்றது.

பெண்கள், தமது விடுதலைக்காக காலத்திற்குக்காலம்குரல் எழுப்பி வந்துள்ளனர். பெண்களுக்கு எதிரான சமூக கலாசார ஒடுக்குமுறைகளுக்கு எதிராக போராட பல மகளிர் அமைப்புக்கள் தோன்றின.

ஒரு காலத்தில் பெண் விடுதலை என்று பேசுவதே குற்றமாகக் கருதப்பட்டது. அது பற்றிப் பேசத் துணிந்தவர்களை சமூகம் இழிவாகப் பார்த்தது. அவர்களை ஏற்றுக்கொள்ள மறுத்தது

தமிழீழ விடுதலைப் போராட்டம் பெண்கள் மன நிலையில், சமூகத்தில் பெரும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

பெண்கள் பலவீனமானவர்கள் அல்ல; எதையும் செய்யும் ஆற்றல் மிக்கவர்கள் என்ற நம்பிக்கையை பெண்களுக்குப் பெற்றுத் தந்திருக்கின்றது.

அதேவேளை பெண்களை பலவீனமானவர்களாகப் பார்த்து, அவர்களை சமூக கலாசார ரீதியாக ஒடுக்கிய வர்களது பிழையான பார்வையை எடுத்துக் காட்டியுள்ளது.

மாறிவரும் புதிய சூழலில் தமிழீழம் எங்கும் பெண்கள் விடுதலைக்காக விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி போராட முன்வந்துள்ளது.

இப்போதுதான் முதன்முதலில் தமிழர்களின் நீண்டகால வரலாற்றில் - ஒரு புரட்சிகரமான நிலையில் மகளிர் முன்னணி உருவாகியுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# புலிகளின் குரல்

## இன்றைய போரின் பின்னணியில் ......

10-6-90 அன்று மட்டக்களப்பில் சிங்கள காவல்துறையினருடன் உண்டான சிறிய பிரச்சனை, ஒருபோராக மாறியது என்று பலர்கருதலாம்.

11ம் திகதியில் இருந்து 16ம்திகதி போர் நிறுத்தம் ஏற்படும் வரை 75றகும் மேற்பட்ட போராளிகள் உயிரிழந்தார்கள்.

300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்டார்கள். பல கிராமங்கள், கடைகள் எரிக்கப்பட்டன. 16ம் திகதி நாம் போர்நிறுத்தத்திற்கு இணங்கிய போதும் அரசு போர் நிறுத்த உடன்பாட்டை மீறியதோடு தமிழ் பேசும் மக்கள் மீது முழு அளவிலான போரைப் பிரகடனப் படுத்தியுள்ளது. தொடர்ந்தும் தமிழ், முஸ்லீம் மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டும் உடமைகள் அழிக்கப்பட்டும் வருகின்றனர்.

ஒரு சிறு பிணக்கு பெரும் போராக மாறியமைக்கு பல காரணங்கள் இருந்தன.

சிறிலங்காவின் ஜனாதிபதி எம்முடன் பேசும் பொழுது தான் போரை விரும்பவில்லை என்றும், பிரச்சனைகளை பேசித் தீர்க்க விரும்புவதாகவும் கூறிவந்தார்.

ஆனால், சிங்களப்படை மேலும்மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டு, முகாம்கள் பலமாக்கப்பட்டு போருக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன.

குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படும் எனக் கூறினார்.

ஆனால், குடியேற்றங்கள் தொடர்ந்தன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று அல்லது இரண்டு முகாம்களைத் தவிர மற்றையவை மூடப்படும் எனக் கூறினார்.

ஒருசில முகாம்களை எமது திருப்திக்காக மூடியபின், மற்றைய முகாம்களை மூடுவதால் சிங்களவர்களுக்கு பாதுகாப்பு இல்லை, முஸ்லீம்மக்கள் முகாம்கள் மூடப்படுவதை விரும்பவில்லை எனக்கூறிக் கொண்டு அம்முகாம்களைப் பலப்படுத்தினார்கள்.

உதாரணமாக தோப்பூர், மூதூர் முகாம்களை மூட முஸ்லீம் மக்கள் விரும்பிய போது, அரசு அவர்கள் விரும்பவில்லை என மூட மறுத்தது.

முஸ்லீம் மக்களைப் பாதுகாப்பதாக ஏமாற்றும் அரசு, அண்மையில் நடந்த போரில் கல்முனை, வாழைச்சேனை, மூதூர், கிண்ணியா, பகுதிகளில் வாழும் முஸ்லீம் மக்கள்மீது குண்டு வீசி அவர்களை அழிக்கத் தயங்கவில்லை.

மாகாணசபை விரைவில் கலைக்கப்படும் என்றும் ஆறாவது சட்டத்திருத்தம் விரைவில் நீக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

ஆனால் சாதாரண பிரச்சனைகளைப் பெரிதுபடுத்தி தெற்கிலும், பாராளுமன்றத்திலும் சுமுகமான சூழ்நிலை ஏற்படவில்லை எனக் காலம் கடத்தினார்கள்.

தமிழீழத்தில் அமைதியும், சமாதானமும் ஏற்படுத்த எனக்கூறிக்கொண்டு, தமிழீழத்தின் அழிவுக்கு இந்தியப் படையோடு ஒத்துழைத்த ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளோட், போன்ற குழுக்களுடனும், தமிழீழத்தில் எவ்வித ஆதரவும் அற்ற தனிமனிதக் கட்சிகளுடனும் கூட்டுறவை ஏற்படுத்தினார்கள்.

இந்தியா செய்ததைப் போல், அவர்களை எமக்கு எதிராகப் பயன் படுத்தும் முயற்சியில்மறைமுகமாக இறங்கினார்கள்

வடகிழக்கு மாகாணசபை ஆளுனராக தமிழர், அல்லது முஸ்லீம் ஒருவரை நியமிக்கவும், திருகோணமலை அரசாங்க அதிபராக தமிழரையும், அம்பாறையில் மேலதிக அரசாங்க அதிபராக முஸ்லீமையும் நியமிக்க அரசு இணங்கியது.

அம்பாறையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள் என்றும், அங்கு சிங்களவர் ஒருவரே அரச அதிபராக இருக்க வேண்டும் எனவும் கூறிய அரசிடம், அம்பாறையில் முஸ்லீம் மக்களே பெரும்பான்மையினராக வாழ்கின்றார்கள் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து மிகுந்த தயக்கத்துடன் மேலதிக அரச அதிபராக ஒரு முஸ்லீமை நியமிக்க அரசு இணங்கியது.

இதனையும், சூழ்நிலை சரியில்லை என செய்யாமல் காலம் கடத்தியது.

சிங்கள அரசு சமாதானம் என்ற போர்வையில் தனது, இராணுவம் காவல் துறை அரச நிர்வாகம் ஆகியவற்றின் மூலம் தமிழீழத்தை புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கமுயன்றது.

சிங்கள இராணுவமும், காவல்துறையும் தாமேதான் தமிழீழத்தின் அரசு என்பது போலச் செயற்பட விரும்பின.

70களில் இருந்து 87வரை சிங்கள இராணுவம் தமிழீழப் பகுதியில் அரசுக்குள் ஓர் அரசாகச் செயற்பட்டது.

சிங்கள அரசோ அல்லது இராணுவமோ, காவல்துறையோ தாம் விரும்பிய வண்ணம் தமிழீழ மண்ணில் ஆதிக்கம் செலுத்த முடியாது என்பதை உணர்ந்திருந்த போதிலும் இந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளவும், தாங்கிக்கொள்ளவும் அவர்களால் முடியவில்லை.

இதன் ஒட்டுமொத்தமான விளைவுதான் இன்றைய போர்.

இப் போர் பல உண்மைகளை எடுத்துக்காட்டி நிற்கின்றது.

1. இடைக்காலத் தீர்வுகள் நிரந்தர அமைதியைத் தரமாட்டா.

2. சிங்கள ஆதிக்கம் தமிழீழத்தில் இனியும் தொடர முடியாது.

3. இன்றைய தமிழீழத்தின் தலைமைகளை விலை கொடுத்து வாங்கவும் முடியாது. அழுத்தம் போட்டு பணிய வைக்கவும் முடியாது.

4. தமிழீழமக்களை தொடர்ந்தும்ஏமாற்ற முடியாது.

5. தமிழ் மக்களையும், முஸ்லீம் மக்களையும்.மோதவிட்டு வடக்கையும், கிழக்கையும் பிரித்து ஆளும் சூழ்ச்சி இனிமேல் சரிப்பட்டு வராது.

6. பிரேமதாசாவுக்கும், ஜே ஆருக்கும், முன்னய சிறிலங்கா பிரதமர்களுக்கும் தமிழ் பேசும் அமக்களை ஏமாற்றும்- அடக்கியாளும் மனநிலையில் வேறுபாடு கிடையாது.

தமிழீழப் போராட்ட வரலாற்றில் முதன் முதலாக இராணுவ முகாம்களை விட்டு இராணுவம் விரட்டி அடிக்கப்பட்டது. புலிகளுக்கு கிழக்கில் பலமில்லை, ஆதரவில்லை என்று கூறப்பட்ட கிழக்குப் பகுதியில்தான் இராணுவம் விரட்டப்பட்டது.

கல்முனை, கல்குடா, தீரியாய், தோப்பூர், கிண்ணியா, முகாம்களில் இருந்து படைகள் வெளியேற்றப்பட்டன

தமிழீழமே தமிழீழவிடுதலைப் புலிகளுக்குப் பின்னால் அணிதிரண்டு நிற்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளை ஜே.வி.பிக்கும், தமிழர்தம் தலைவர் திரு வே.பிரபாகரனை வரதராஜப்பெருமாளுக்கும் ஒப்பிட்டுப் பேசி இருக்கும் பிரேமதாசாவுக்கும், ரஞ்சன் விஜேயரத்தினாவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஜே.வி.பி அல்ல என்பதும், திரு பிரபாகரன் பெருமாள் அல்ல என்பதும் நன்கு தெரியும்.

இத்தீவை ஆக்கிரமித்த உலகின் நாலாவது பெரிய இராணுவத்தை எதிர்த்து சிங்கள அரசோ அல்லது வேறு யாருமோ போராடவில்லை.

தமிழீழ மக்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ் அணிதிரண்டு போராடி அவர்களை வெளியேற்றுவதிலும் வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதை, திரு பிரேமதாசாவும், சிறிலங்கா அரசும், இராணுவமும் நினைவில் வைத்திருப்பது நல்லதாகும்.

# இஸ்ரேலின் நலன்புரி அமைப்பு மூடப்பட்டது ஏன்?

இலங்கையில் 1985ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி அரசினால் உருவாக்கப்பட்ட இஸ்ரேலின் நலன்புரி அமைப்பு 1990 பங்குனியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசினாலேயே மூடப்பட்டது.

ஏறத்தாள ஐந்து ஆண்டுகள் இலங்கை முஸ்லிம் மக்களினதும், தமிழ் மக்களினதும், உலக முஸ்லிம் நாடுகளினதும் எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது இயங்கிய இவ்வமைப்பு இப்போது மூடப்பட வேண்டிய தேவை என்ன?

மூன்றாம் உலக நாடுகளில் நடந்து கொண்டிருந்த விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதன் மூலம் பொதுவுடமைக் கொள்கையை அந் நாடுகளில் பரவவிடாது தடுப்பதற்காகவே அமெரிக்காவும். மேற்கு ஐரோப்பியா நாடுகளும் மூன்றாம் உலக நாட்டு அரசுகளுக்கு நிதி உதவி கொடுத்தன.

மாறிவரும் உலக சூழலில் அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் மூன்றாம் உலக நாடுகளுக்கு முன்பு போல பெருமளவில் நிதி உதவிகளை வழங்குவதை நிறுத்தியுள்ளன.

இன்று, பொதுவுடமைக் கொள்கை உலகில் வலுப்பெறுவது குறித்தும் அது மூன்றாம் உலக நாடுகளுக்கு பரவும் சூழ்நிலையும் குறைந்துள்ளதாக கருதப்படுகிறது.

இதே சமயம் பொதுவுடமைக் கொள்கை எனும் பெயரில் சோவியத் யூனியனின் பிடிக்குள் இருந்து விடுபட்டுள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளை மேலும் மேலும் பொதுவுடமைக் கொள்கையிலிருந்தும் விடுபடச் செய்வதற்காக அந்த நாடுகளுக்கு அமெரிக்காவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் பெருமளவில் நிதி உதவிகள் செய்யத் தொடங்கியுள்ளன.

இவ்விதமாகவே முன்னர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஸ்ரீ லங்கா அரசிற்கு உதவி செய்தன

இஸ்ரேலிய நலன்புரி அமைப்பை இலங்கையில் வைத்திருப்பதை உலக முஸ்லிம் நாடுகள் எதிர்த்தபோதும் இஸ்ரேல், அமெரிக்கா, மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து கிடைத்த பெருமளவு ஆயுத, நிதி உதவி காரணமாக உலக முஸ்லிம் நாடுகளின் எதிர்ப்பை இலங்கை அரசு அசட்டை செய்தது.

மூன்றாம் உலக நாடுகளுக்கு இனி யார் உதவுவார்கள்?

அமெரிக்காவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் இலங்கைக்கான நிதி உதவியை பெருமளவில் குறைத்தவுடன் அந்த நிதி உதவிகளை உலக முஸ்லிம் நாடுகளிடமிருந்து பெற ஸ்ரீலங்கா அரசு தீர்மானித்திருக்கும்.

அவ்விதம் உலக முஸ்லிம் நாடுகளிலிருந்து நிதி உதவிகள் பெறுவதற்கு 'இலங்கையில் இஸ்ரேலிய நலன்புரி அமைப்பு இருப்பது தடையாக இருக்கும்.

எனவேதான் உலக முஸ்லிம் நாடுகளிலிருந்து நிதி உதவிகளைப் பெறுவதற்காக இஸ்ரேலிய நலன்புரி அமைப்பை மூட பிரேமதாசாவின்அரசு முடிவு செய்திருக்கிறது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

www.eelamview.com



# பட்டித்திடல் படுகொலை

தமிழ்பேசும் மக்களை அவர்களது வழிவழித் தாயகத்திலிருந்து விரட்டியடித்துவிட்டு அதைச் சிங்கள மயமாக்கும் நோக்குடன் தமிழர் கிராமங்களை அழித்து அம்மக்களைக் கொன்று, உடமைகளை அபகரித்து வருவது உலகம் அறிந்த செய்தி.

இவ்விதம் சிங்கள வெறியர்களால் அழிக்கப்பட்ட கிராமங்களுள் ஒன்றுதான் "பட்டித்திடல்" ஆகும்

26-4-87 அன்று இக்கிராமத்திற்குள் புகுந்த சிங்களப் படைகள் ஒரு கூட்டுக் குடும்பத்தைச் சோந்த 16 தமிழர்களை கொன்றொழித்தார்கள்.

நீண்டு பரந்த வயல் வெளிகளுக்கு நடுவேதான் பட்டித்திடல் கிராமம் எழுந்து நிற்கிறது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றப் பகுதிகளுக்குள்ளாக சுற்றிவரும் வாய்க்காலின் தண்ணீர், அந்த ஊரின் வயல் நிலங்களை நிறைத்து நிற்கும்.

மடுக்களிலும், சேற்றுக்குழிகளிலும், மழைக்கால அல்லிகள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கும். அங்கு கோடை என்றும் மாரி என்றும் இருப்பதில்லை. எப்போதும் நீர் நிறைந்த வயல் நிலங்களின் குளிர்த் தென்றலில் அந்தக் கிராமம் குதூகலிக்கும்.



பொன்னம்மா
55 வயது



பத்தினியன்
37 வயது



சீதையம்மா
33 வயது



பிரகாஸ் 9 வயது



சோபனா 13 வயது



அற்புதராசா 2 வயது

வயல் நிலங்களுக்கு அப்பால் மேட்டு நிலங்களில் வாழைகளும், தென்னைகளும், பழமரங்களும் ...

ஒரு காலத்தில் அழகான அமைதி நிறைந்த கிராமந்தான் அது. ஆனால் இப்பொழுது ...

இந்த ஊர் மக்களின் வாழ்வு சோகமானது. சுற்றிவர ஆயுதமேந்திய சிங்களவர்களின் திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு மத்தியில் அவர்கள் இருந்தார்கள். அந்தக் கிராமத்து மக்கள் ஆபத்திற்கு அருகிலேயே வாழ்ந்தார்கள்.

தெகிவத்தையின் துப்பாக்கி ஓசைகள் இவர்களை 'துயிலெழுப்பும். ஊருக்குள் நுழையும் ஊர்காவல் படைகளிடம் இவர்கள் தமது உடைமைகளை இழந்துவிடுவார்கள். சில நேரங்களில் அவர்களின் துப்பாக்கிகளுக்கு இந்த ஊரின் மக்கள் தமது உறவுகளையும் இழந்து விடுவார்கள்.

அந்தக் கிராமத்து மக்கள் வீதிக்கு வந்து தலை நிமிர்ந்தால், தூரத்தில் பரந்த வயல் நிலங்களுக்கு அப்பால் சேருவலவின் இரண்டு பௌத்த விகாரைகளும் தெரியும்.

"உங்களது நிலங்களை நாங்கள் பறித்துக் கொண்டு இருக்கின்றோம்" என்பதை அந்த விகாரைகள் நினைவுபடுத்தும்.

சிலகாலத்தின்பின்பு இங்கே ஒரு விகாரை எழும். பெரியதொரு சிங்களக் கிராமம் இங்கும் எழுந்து நிற்கும். தமது சொந்த மண் பறிபோவதையும், அங்கே சிங்களக் குடிகள் பரவுவதையும் தடுக்க அந்த அப்பாவி மக்களால் முடியவே இல்லை.

பட்டித்திடலின் அயற் கிராமங்களான மல்லிகைத்திவு, மணற்சேனை, இனிவெட்டி, மேன்காமம் ஆகிய இடங்களிலிருந்து தமிழ் மக்கள் மிகக் கொடுமையான முறையில் விரட்டப்பட்ட நேரம், இந்தக் கிராமங்களை நோக்கி சேருவல, அலிஒலுவ, நிலாப்பனை, தெகிவத்தை ஆகிய சிங்களக் கிராமங்களிலிருந்து சிங்களவர்கள் படிப்படிப்படியாகப் பரவிக்கொண்டிருந்த காலத்தில்...

ஒரு நாள்...

1987 சித்திரை 26 அன்று-தூரத்தில் வெடிச்சத்தங்கள் கேட்டன. சிங்களப்படைகள் தங்களை நோக்கி வருவதை உணர்ந்துவிட்ட அக்கிராமத்து மக்கள், விரைவாகக் கலைந்தார்கள். ஆதரவு தேடி தூரத்துக் கிராமங்களுக்கு ஓடிச் சென்றார்கள். அடுத்து சிங்களக் காடையர்களால் பட்டித்திடல் கிராமந்தான் அழிக்கப்படும் என்பதை எல்லோரும் அறிந்திருந்தார்கள்.

உலகநாதன் போதகர், அன்று மூதூரில் நின்றார். 'ஊரில் பிரச்சனையாம். வீட்டில என்ன பாடோ தெரியவில்லை. அண்ணை நிற்கிறார் தானே. எல்லோரையும் பாதுகாப்பாகக் கூட்டிக் கொண்டு போயிருப்பார். ...' உறவுகளை எண்ணி அவரது மனம் தவித்துக் கொண்டிருந்தது.

அருகில் இருந்த சிங்களக் கிராமங்கள், ஒரு வலுச்சண்டைக்குத் தயாராகின. தோப்பூர், மூதூர், தெகிவத்தை, நீலாப்பனை ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து சிங்களப் படைகள் பட்டித்திடலை நோக்கி வந்து கொண்டிருந்தன. அந்தக்கிராமத்தின் விளைந்த வயல் நிலங்கள் இராணுவ பூட்ஸ் கால்களால் நாசமாக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

பொன்னம்மாவின் வீட்டிற்குள் அந்த நாலு குடும்பமும் தஞ்சமடைந்தது. அது ஒரு இறைபக்திநிறைந்த குடும்பம். கர்த்தரையே நம்பி வாழ்பவர்கள். பொன்னம்மா தன் கடைசி மகள் மேரியுடன் அங்கு வசித்து வந்தாள். அவளது மகன்களான பத்தினியனும், உலகநாதனும் ஒரே குடும்பத்தில் திருமணம் செய்திருந்தார்கள். அந்தப்பெண்களின் மூத்தசகோதரியும் அவர்களுக்கு அருகிலேயே வாழ்ந்து வந்தாள். உறவுகளால் பிணைக்கப்பட்ட பாசம் நிறைந்த கூட்டுக் குடும்பம் அது.

பக்கத்து வீட்டு மாரிமுத்து அம்மா ஓடி வந்து கேட்டாள். "பிள்ளையள் வாங்கோ. ஊர் வெறிச்சோடிப்போச்சு. ஊரில ஒருத்தரும் இல்லை. அவனுகள் வந்தவுடன் உங்களைத் தான் கொல்லுவாங்கள். வாங்கோ நாங்களும் போவம்."

"இல்லை சின்னம்மா, இது நாங்கள் வாழ்ந்து வளர்ந்த வீடு இதை எரிய விட்டிட்டு நாங்கள் எங்க வாறது. நாங்கள் ஒருத்தருக்கும் ஒரு பாவமும் செய்யாதவர்கள். எங்களை இறைவன் காப்பாற்றுவார். நீங்கள் போங்கோ சின்னம்மா."

மாரிமுத்து திரும்பி நடந்தாள். சிறிது தூரத்தில் அவளுக்கு முன்னால் பெருந்தொகையான இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் வந்துகொண்டிருந்தார்கள் அவளது நெஞ்சம் அதிர்ந்தது. அருகிலிருந்த வாழைத் தோட்டத்திற்குள் அவள் மறைந்து கொண்டாள். பட்டித்திடலின் அந்தப் படுகொலை நிகழ்வுகளுக்கு அவள் தான் சாட்சி. அவளது காதில் தான் துப்பாக்கிகளின் வேட்டோசைகளும், அந்த ஜீவன்களின் இறுதி ஓலங்களும் ஒலித்து ஓய்ந்தன. அவளுக்குத்தான் தெரியும், அந்த அப்பாவி உயிர்கள் அனுபவித்த சித்திரவதைகளும் வேதனைகளும் எவ்வளவு கொடுமையானவை என்று.

"ஐயோ! ஐயா, என்னை ஒண்டும் செய்யாதீங்கோ: சுடாதீங்கோ ஐயா! என்ர குழந்தைகளை விடுங்கோ!" அராஜகவாதிகளின் காதில் விழாமல்போன அந்த அவலம் நிறைந்த குரல்களை, அவள் இன்னும் மறக்கவில்லை.

தூரத்து துப்பாக்கிகளின் வெடியோசைகள் கேட்டுக் கொண்டிருந்தது. அவர்கள் ஒன்றாக இருந்தார்கள். நடுங்கியபடியே அவர்களது, வார்த்தைகள் இதயத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்தன.

"பரலோகத்திலிருக்கும்
எங்கள் பிதாவே.
உம்முடைய நாமம் ... ...
எங்களை சோதனைத் தீயில்
விழவிடாது
இந்தச் சத்துராதிகளிடத்திலிருந்து-
எம்மைக் காத்துக்கொள்ளும்.
ஆமென்.

யோகேஸ்வரி தன் இருகுழந்தைகளுக்கும் அரிக்கன் சட்டிக்குள் சோற்றைப் போட்டுக் கொடுத்துவிட்டு, தானும் குழந்தைகளுக்கு அருகில் இருந்து கொண்டாள்.

- செந்தில்மணி வயது 35
- கோகுலேஸ்வரி ,, 15
- பாலமுருகன் ,, 12
- யோகராசா ,, 10

வீட்டிற்கு அருகில் பூட்ஸ் கால்களின் நெரிக்கும் ஓசை; விளங்காத முரட்டுக் குரல்களின் சிங்கள வார்த்தைகள். அவர்களின் இதயம் பலமாக அடித்தது. நெஞ்சுக்குள் ஏதோ பாரமாக அழுத்தியது.

வீட்டின் வாசற் கதவுகள் பலமாக உதைக்கப்பட்டன. நீண்டநேர மனப்போராட்டத்தின்பின் பொன்னமாள் கதவுகளைத் திறந்தாள். வாசலில் நின்றவனின் துப்பாக்கி, வெறிபிடித்து இயங்கியது. "ஐயோ!"... அவளது வார்த்தைகள் வெளிவரவில்லை. அவனுக்குப் பக்கத்தில்வந்தவர்களின் கத்திகளும் வாள்களும் பொன்னம்மாவை சிதைத்தன. "ஐயோ! என்ர அம்மாவை, ஒண்டும் செய்யாதீங்கோ ஐயா" தன் தாய் கண் முன்னாலேயே கொல்லப்படுவதைக் கண்டு பத்தினியன் கதறி அழுதான். ஆனால் அவர்களின் துப்பாக்கிகள் பத்தினியனையும் சாகடித்தது.

உள்ளே, பத்தினியனின் மனைவி சீதையம்மா நடுங்கிக்கொண்டிருந்தாள். அவளுடன் அவளது பிள்ளைகள் ஒட்டி நின்றனர். வீட்டில் எங்கும் துப்பாக்கிகளின் வேட்டோசைகள். ஒரு இனவெறியன் சீதையம்மாவை இழுத்து அவளது பிள்ளைகளின் அழுகுரல்களுக்கிடையே கட்டுத் தள்ளுகிறான். அவளது பிள்ளைகளான பிரகாஸ், சோபனா, அற்புதராசா, நிசாந்தி எல்லோருமே ஒவ்வொருவராக வெட்டியும், குத்தியும் குரூரமாகக் கொல்லப்படுகிறார்கள். அந்தச் சின்னஞ்சிறுசுகளின் கெஞ்சல்களும், பரிதாபம் நிறைந்த வேண்டுகோள்களும் அந்த மனித மிருகங்களின் மனங்களில் இரக்கத்தைக் கொண்டு வரவில்லை.

ஆனால் சீதையம்மாவின் மூத்த மகன் நேசன் அந்த வீட்டிற்குள்ளேயே, எங்கேயோ ஓடி ஒளித்துவிட்டான்.

வீட்டினுள் நுழைந்த சிங்களப்படைகளின் கண்களில் அந்தச் சின்னஞ்சிறுசுகளும் எதிரிகளாகவே தெரிந்தார்கள். யோகேஸ்வரியின் கண்களின் முன்னாலேயே அவளது பச்சைப் பிஞ்சுகள் கொல்லப்பட்டார்கள். ஜெயரதி; அந்தச் சின்னக் குழந்தையின் கழுத்தில் துளைத்த துப்பாக்கிக் குண்டு அவளை சுவற்றில் தூக்கி வீசியது. அவளுடைய சகோதரி ஜெயபிரியாவின் தலையை ஒரு துப்பாக்கிக் குண்டு சிதைத்தது. தன் கண் முன்னாலேயே சிதைந்து விட்ட குழந்தைகளைப் பார்த்து யோகேஸ்வரி இயலாமல் நின்றாள். அந்தக் காட்டுமிராண்டிகளின் கண்களுக்கு ஒரு தாயின் உருக்கம் நிறைந்த கண்ணீரின் தன்மை

(15 பக்கம் தொடர்ச்சி)



நிருஷாந்தி 3 வயது



ஜெயரதி 3 வயது



ஜெயப்பிரியா



யோகேஸ்வரி
26 வயது



மேரி 26 வயது



நேசன் 15 வயது

www.eelamview.com

www.eelamview.com



# மலையகம் வாழ் தமிழர்களும் அவர்களை நாடற்றவர்களாகச் செய்யப்பட்ட சூழ்ச்சிகளும்

இலங்கைத் திவு முழுவதும் பிரித்தானிய ஆட்சிக்குட்பட்டதைத் தொடர்ந்து மலைநாட்டுப் பிரதேசங்களில் பெரியளவிலான பெருந்தோட்டங்கள் உருவாகத் தொடங்கின. இவற்றில் ஆரம்பத்தில் கோப்பிப்பயிர் செய்கைபண்ணப்பட்டதெனினும் அப் பயிரினை நோய் தாக்கியதனால் அவைகள் தேயிலைத் தோட்டங்களாக மாற்றப்பட்டன.

### தேயிலைப்பயிர் உற்பத்தி

இத் தோட்டங்கள் ஐரோப்பியர்களினால் ஆரம்பிக்கப்பட்டன. இத்தோட்டங்களில் வேலை செய்வதற்குத் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். மலைநாட்டுப் பகுதியிலோ அல்லது தீவின் கரையோரப் பகுதிகளிலோ, காடுகளை அழித்துத் தேயிலைச் செடிகள் வளர்த்துப் பயிராக்கவும், தேயிலைக் கொழுந்து பறிக்கவும், அதனைப் பதனிட்டும் ஈற்றில் தேயிலையாக்கவும் வேண்டிய தொழிலாளர்கள் இல்லாதிருந்தனர். எனவே இந்தியத் துணைக் கண்டத்தின் தமிழ் நாடு பிராந்தியத்திலிருந்து இக் கடின உழைப்புக்கான தொழிலாளர்கள் தருவிக்கப்பட்டனர்.

### தோட்டக் கூலிகளாக இந்தியத் தமிழர்

1837 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாறாகத் தமிழ்நாட்டில் இருந்து கூலிகள் என்ற பெயரில் பெருந்தொகையான தமிழர்கள் தருவிக்கப்பட்டனர். பெருந்தோட்ட முதலாளிமார் தொழிலாளர்களைத் தருவிப்பதற்கான பாரிய ஒழுங்குகளைச் செய்திருந்தனர். மலை நாட்டுத் தோட்டங்களிலேவேலைசெய்வதற்கெனத் தருவிக்கப்பட்ட அனைத்து இந்தியத் தமிழ் நாட்டாரும் இப்பெருந்தோட்ட முதலாளிமார் மூலமே தருவிக்கப்பட்டனர். இவ்விதம் 1837 தொடக்கம் தருவிக்கப்பட்ட இந்தியத் தமிழ்நாட்டுத் தொழிலாளர்களது எண்ணிக்கை இலங்கைத் தீவுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்ட 1948 ஆம் ஆண்டு காலகட்டத்தில், இலங்கைத் தீவின் ஆதித் தமிழர் தொகைக்குக் கிட்டத்தட்ட சமனாக இருந்தது. சுமார் 50,000 பேர்வரை இலங்கைத் தமிழர், இந்த மலையகம் வாழ் தமிழர் எண்ணிக்கையிலும் பார்க்கக் கூடியோராக இருந்தனர். ஆனால் தோட்டங்களுக்கு வெளியேயிருந்த இந்திய தமிழ்நாட்டுத் தமிழர் எண்ணிக்கையையும் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களின் எண்ணிக்கையுடன் சேர்த்துப் பார்த்தால் இவர்களின் மொத்த எண்ணிக்கை ஆதித் தமிழரின் எண்ணிக்கையிலும் பார்க்க சுமார் இரண்டு லட்சம்வரை கூடுதலாகவே அமைந்திருந்தது. இந்தநிலை 1948ம் ஆண்டளவில் காணப்பட்டது.

### மகாவம்சமும் இன வாதமும்

இந்தியத் தமிழர் இவ்வாறு பெருமளவில் இலங்கைத் தீவுக்குத் தருவிக்கப்பட்டது, சிங்களத் தலைவர்களுக்கு உகந்ததாயில்லை. மொழி, மதம் ஆகியவற்றால் சிங்களவரில் இருந்து வேறுபட்ட மலையகம் வாழ் தமிழரை பொதுவாக சிங்கள அரசியல் தலைவர்கள் வெறுக்கவே செய்தனர். சிங்கள சரித்திரத்தைச் சொல்லுவதற்காகக் கூறப்படும் மகாவம்சம். சிங்களவரிடையே வளர்த்து விட்ட தமிழர் விரோத மனப்பான்மையும் இதற்கு ஒரு காரணமாக அமைந்திருக்க வேண்டும். மலையகம் வாழ் தமிழரை வெளியேற்ற வேண்டும் என்ற மனப்பான்மை சிங்களவரிடையே இலங்கை சுதந்திரம் பெறமுன்பே எழுந்துவிட்டதைச் சரித்திரம்நன்கு காட்டுகிறது.

அதே நேரத்தில் மலையகம் வாழ் தமிழரை நேரடியாக அல்லது மறைமுகமாக வெளியேற்ற சிங்களவர் எடுத்த முயற்சிகளுக்கு இலங்கையின் ஆதித் தமிழ் மரபினர் எதிர்ப்பாயிருந்தனர். மொழி, மத பண்பாட்டு ஒருமைப்பாட்டு உணர்வுடன் சிறுபான்மையினரின் பலம் குறைவதை அவர்கள் விரும்பவில்லை என்பது இதற்கான தெளிவான காரணங்களாகும்.

### டொனமூர் ஆணைக் குழுவின் பரிந்துரைகள்.

இலங்கையில் படிப்படியாக வாக்குரிமை முறை அமுலாக்கத்திற்கு வரத் தொடங்கியதைத் தொடர்ந்து, சிங்களவருக்கும் மலையகம்வாழ் தமிழ் மக்களுக்குமிடையேயான முரண்பாடுகளும் கூர்மையடையத் தொடங்கின. பிரிட்டிஷ் அரசு இலங்கையின் அரசியல் யாப்பில் திருத்தம் செய்வதற்கு வேண்டிய பரிந்துரைகளை வழங்க டொனமூர்ப் பிரபு தலைமையிலான ஒரு குழுவை நியமித்து அக்குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் 1931 ஆம் ஆண்டு முதல் ஒரு புதிய அரசியல் யாப்பை அமுல் படுத்தியது. டொனமூர் ஆணைக்குழுவின் விதந்துரைகளின்படி இப்பொழுது சர்வசன வாக்குரிமை என்று அழைக்கப்படும் திட்டம் இலங்கைத் தீவிற்கு முதலில் அறிமுகப் படுத்தப்பட்டது.

இலங்கையில் வசிக்கும் 21 வயது நிரம்பிய சகல ஆண்களுக்கும் 30 வயது நிரம்பிய பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்பது டொனமூரின் பரிந்துரையாகும். ஆனால் மலையகம்வாழ் தமிழர்களுக்கு வாக்குரிமை மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதில் சிங்களவர் விடாப்பிடியாக நின்றதனால் சர்வஜன வாக்குரிமைத் தத்துவத்துக்குப் பங்கம் இல்லாமல் டொனமூர் ஆணைக்குழு மேலும் ஒரு விதியை சிபாரிசு செய்திருந்தது. இதன்படிக்கு வாசகால தன்மையாக ஐந்து ஆண்டுகளை சிபாரிசு செய்தது. மொத்தத்தில் பார்க்கையில் இலங்கையில் 5 ஆண்டு காலம் வசித்த 21 வயது நிரம்பிய சகல ஆண்களுக்கும் 30 வயது நிரம்பிய சகல பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமென டொனமூர் ஆணைக்குழு சிபாரிசு செய்தது. ஆனால் டொனமூர் ஆணைக்குழுவின் இவ்விதந்துரையில் சில முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்ட பின்பே பிரிட்டிஷ் அரசு இதை நிறைவேற்றியது. இதன்படி 5 வருட வாசகாலத்தையுடைய ஒருவர் தகுதி வாய்ந்த ஓர் அதிகாரியிடம் இருந்து நிரந்தர வசிப்புச் சான்றிதழ் பெறவேண்டியிருந்தது. சிங்களவரைத் திருப்திப்படுத்த அன்றைய பிரிட்டிஷ் அரசு தனது ஆணைக்குழுவின் விதந்துரைகளில் இவ்வாறான மாற்றம் கொண்டு வந்தது.

### சோல்பரி ஆணைக்குழு விதந்துரை

டொனமூர் ஆணைக்குழுவைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட சோல்பரி ஆணைக்குழுவின் காலத்திலும் இப்பிரச்சனை ஆராயப்பட்டது.

மலைநாட்டுத் தமிழர்களை அழித்தொழிக்கும் திட்டத்தில் சிங்களவர் நயவஞ்சக முறையையே கையாண்டனர். மலைநாட்டுத்தோட்டங்களில் வேலை பார்க்கும் மலையகம் வாழ்தமிழரை நாடு கடத்துவதோ அல்லது நசுக்குவதோ தம் நோக்கம் அல்ல; ஆனால் இலங்கைக்குள் பிறநாட்டார் சுலபமாக வந்திருப்பது அதாவது குடியமர்த்துவது கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதே தமது நோக்கமென நடித்தனர். இதன் அடிப்படையில் சோல்பரி ஆணைக் குழு தனது விதந்துரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தது.

இலங்கைக்குள் பிற நாட்டவர் குடியிருப்பதைத் தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கான எந்தச் சட்டமூலத்தையும் பேரரசின் ஒப்புதலுக்காக ஒதுக்கி வைக்காமல் ஆளுனர் அவற்றிற்கு ஒப்புதல் வழங்கலாம். ஆனால் அச்சட்டமூலம் நிறைவேற்றப்படும்பொழுது இலங்கையில் வசித்தவர்கள் (வெளிநாட்டிற்குச்சென்று) மீண்டும் இலங்கைக்குத் திரும்புவது சம்பந்தமான ஏற்பாடுகள் அச்சட்டத்தில் நியாயமற்றவையாய் இருந்தால் அதனை ஆளுனர்கள் பேரரசின் ஒப்புதலுக்காக ஒதுக்கிவைக்க வேண்டும்.

வாக்குரிமை சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளை மட்டுமே கொண்ட எச்சட்டமும், பேரரசின் ஒப்புதலுக்கு ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென்று ஆளுனர்க்கு கட்டளை பிறப்பித்த சட்டங்களுள் அமைவதாகக் கருதப்படத் தேவையில்லை

இதன் ஒரு பின்னணியை நாம் கவனித்தல் வேண்டும். மலையகம் வாழ் தமிழ்த் தொழிலாளர் பெருமளவில் மலைநாட்டுத் தோட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தாலும் ஏனைய பல அரசாங்க திணைக்களங்களிலும் இத்தகைய தொழிலாளர் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். உதாரணமாக, புகையிரதத்துறை, பகிரங்க வீதித்துறை, சுகாதாரத்துறை ஆகிய அரச துறைகளிலும் இந்திய தமிழ்த் தொழிலாளர் அக்காலத்தில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். சிறப்பாக புகையிரதத்துறைத் தொழிலாளர்கள் இடைக்கிடை தமிழ்நாட்டிற்கு தமது உறவினர்களைப் பார்க்கச் சென்று வந்தனர். இதை புதிய குடிவரவாக சிங்களவர் கருதப்பார்த்தனர்.

இதனாலேதான் சோல்பரி ஆணைக்குழுவினர், குடிவரவை மறுக்க அல்லது கட்டுப்படுத்தச் செய்யப்படும் ஏற்பாடுகளைக் கொண்ட அச்சட்டம் நிறைவேற்றப்பட்ட தினத்தில் இலங்கையிலிருந்து ஒருவர் (வெளியிடம் சென்று) மீண்டும் திரும்ப இலங்கை அநீதியான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கக்கூடாது என்று கூறினார்கள்.

### பொதுத் தேர்தலும் மலையகத் தமிழரும்

சோல்பரி ஆணைக்குழுவின் சிபாரிசுகளை ஏற்ற பிரிட்டிஷ் அரசு, தொடர்ந்து இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து என்ற சுதந்திர நிலையை 1948ல் வழங்கியது. முன்னதாக 1947ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மலைநாட்டுப் பகுதியிலிருந்து ஏழு தமிழர் தெரிவாகினர். உதாரணமாக பதுளை, பண்டாரவளை, நுவரெலியா, தலவாக்கொல்லை, மஸ்கேலியா போன்ற மலைநாட்டுத் தொகுதிகள் அனைத்திலும் இலங்கை-இந்திய காங்கிரஸைச் சேர்ந்த ஏழு பேர் தெரிவாகினர். வேறு பல தொகுதிகளில் அவர்களின் வாக்குகள் வெற்றி வாய்ப்பைத் தீர்மானித்திருந்தன.

இலங்கைக்குச் சுதந்திரம் 1948-ம் ஆண்டு மாசி மாதம் 4-ம் திகதி வழங்கப்பட்டது. அதே ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் திகதி இலங்கைக்கு குடியுரிமைச் சட்டம் ஆளுனரின் ஒப்புதலைப்பெற்ற சட்டமாகியது. திரு. டீ. எஸ். சேனநாயக்காவின் 'சுதந்திரம்' கிடைத்த அதே வருடம் நிறைவேற்றிய கொடிய சட்டங்களுள் ஒன்று இலங்கைக் குடியரசுச் சட்டம் ஆகும். அதாவது ஒருவரின் குடியுரிமையை அவனது பிறப்பை இட்டு அவனது மூதாதையரின் பிறப்பைக்கொண்டு தீர்மானித்தது. இதன்படிக்கு குடிமக்கள் மரபுவழிக் குடிமக்களுக்கான தகைமை வருமாறு :-

1. 15-11-1948க்கு முன் இலங்கையில் பிறந்த ஒருவரின் தகப்பன் அல்லது தந்தைவழிப் பாட்டன் அல்லது தந்தைவழிப் பூட்டன் இலங்கையில் பிறந்திருந்தால் அவர் இலங்கை மரபுவழிக் குடிமகனாவார்.
2. 15-11-1948க்கு முன் இலங்கைக்கு வெளியே பிறந்த ஒருவரின் தந்தையும் தந்தைவழிப் பாட்டனும் அல்லது தந்தைவழிப் பூட்டனும் இலங்கையில் பிறந்திருந்தால் அவர் இலங்கை மரபுவழிக் குடிமகனாவார்.
3. 15-11-1948க்குப் பின் அல்லது அத்தினத்தில் இலங்கையில் பிறக்கும் ஒருவரின் தந்தை அந்நேரத்தில் இலங்கைக் குடிமகனாயிருந்தால் அவர் இலங்கை மரபுவழிக் குடிமகனாவார்.
4. 15-11-1948க்குப் பின் அல்லது அத்தினத்தில் இலங்கைக்கு வெளியே பிறந்திருந்தால் அவர் அவ்வாறு பிறக்கும் நேரத்தில் அவர் தந்தை இலங்கைக் குடிமகனாய் இருப்பதுடன் அவர் பிறந்த ஒரு வருடத்திற்குள் அல்லது காலம் நீடித்து வழங்கப்படின் அவ்வாறு நீடிக்கப்பட்ட காலத்தில் அவர் பிறந்த வெளிநாட்டில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் அல்லது இலங்கையில் அவரின் பிறப்பு பதிவுசெய்யப்பட்டால் - அவர் இலங்கை மரபுவழிக் குடிமகனாகக் கருதப்படுவார்.

பதிவு குடிமக்கள பற்றிய முக்கியத்துவம் அதிகம் இல்லை. மரபுவழிக் குடிமகன் பற்றியதே முக்கியம்.

### சிறப்புரிமைச் சட்டம்

1837லிருந்து இலங்கைக்கு தருவிக்கப்பட்ட இந்தியத் தமிழர், இலங்கையில் குடியேறி ஒரு நூறாண்டு முழுமையாக முடிந்த பின்னர் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இலங்கையில் பிறப்புக்களைப் பதிவதற்கான சட்டம் 1895ல்தான் கொண்டுவரப்பட்டது. அக்காலத்திலும் அனைத்துப் பிறப்புக்களும் கட்டாயமாக பதியப்பட்டு இருக்கும் என்று எதிர்பார்த்திருக்க முடியாது.

இச் சட்டத்தைக் கொண்டுவந்த டி. எஸ். சேனநாயக்காகூட, சட்டப்படி தாம் இலங்கையின் மரபுவழிக் குடிமகன் என நிரூபித்திருக்க முடியாது. ஏனெனில் அவர் பிறந்த காலத்திலே பதிவு முறை இல்லை. அப்படியிருப்பின் அவர் தந்தை காலத்தில் எவ்வாறு பதிவிருந்திருக்க முடியும்? ஆனால் பதிவு ரீதியாகச் சிங்களவரானதால் அவர் இலங்கையின் மரபுவழிக் குடி மகனாவார்,

இக்கொடிய சட்டத்தின் மூலம் மலைநாட்டுத் தமிழர் எவரும் மரபுவழிக் குடியுரிமை பெறமுடியாதுபோய்விட்டது. அவர்களைப் பதிவுசெய்யப் புறம்பான ஒரு சட்டம் 1949 இல் பதிவானது. அதன் கொடிய தன்மை காரணமாகவும் - நிர்வாக இறுக்கம் காரணமாகவும் மிகச் சொற்பமான தோட்டத் தொழிலாளரே பதிவு பெற்ற குடிமக்களாகினார்கள்.. மரபுவழிக் குடியுரிமை அவர்களுக்கில்லை-

### வாக்குரிமை மறுக்கப்பட்டது

தொடர்ந்து வாக்களிக்கும் உரிமை அக்குடிமக்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதால் 1947 பொதுத் தேர்தலின்

(15ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

www.eelamview.com



## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

# சிற்றூர், வட்ட, மாவட்ட அவைகள் கட்டி எழுப்பும் பணியில்......

*அன்பான தமிழீழ மக்களே!*

1972ஆம் ஆண்டில் இருந்து இராணுவ அரசியல் பிரிவுகளின் கட்டமைப்பாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்து வந்தது.

பரந்துபட்ட அளவில் எமது போராட்டத்திற்கு ஆதரவு தந்து கொண்டிருந்தமக்களை ஒரு விரிந்த கட்டுக்கோப்பான கட்டமைப்புக்குள் கொண்டு வருவதன் மூலம், பரந்துபட்ட மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்ததின் விளைவாக உதயமானதுதான், எமது கட்சியான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ஆகும்.

இக்கட்சி தமிழீழமெங்கும் மக்கள் மத்தியிலான அமைப்பு வேலைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இன்று கிராமங்கள் தோறும் சிற்றூரவைகள் அமைக்கப்பட்டு வட்ட, மாவட்ட அவைகள் அமைக்கும் வேலையும் தொடங்கி விட்டது.

ஒரு சில குறிப்பிட்ட எண்ணிக்கையுடையோரைக் கொண்டே இந்த அமைப்புக்கள் கட்டப்படுவதால் இது குறித்து பல தவறான கருத்துக்கள் எழுந்துள்ளன.

நாம் ஒரு புரட்சிகர விடுதலை இயக்கத்தின் அரசியல் பிரிவை பரந்துபட்ட மக்களமைப்பாக மாற்றுகின்றோம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

கட்டுப்பாடும், ஒழுக்கமும், மக்களுக்காக, நாட்டின் விடுதலைக்காக எதையும் இழக்க ஆயத்தமாக இருக்கும் மனநிலையும், எமது கொள்கையில் ஆழமான ஈடுபாடும் உள்ளவர்களைக் கொண்டே கட்சி அமைப்பு கட்டப்படல் வேண்டும்.

எமது போராட்டத்தில் மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த போராளிகள் பலரின் இழப்பால் போராட்டத்திற்கு முழுமையாக உதவியவர்களின் தொடர்பையும் இழந்தோம்.

பலர் வேறு வேலைகள் காரணமாக இடங்கள் மாறிவிடுவதாலும் தொடர்புகளை இழக்கிறோம். குறிப்பாக புலிகள் - இந்தியப் போரின் போது எமது தோழர்கள் ஒரு சிலரால் மட்டுமே இரகசியத் தொடர்புகளும் பேணப்பட்டன; அவர்களின்வீர மரணத்துடன் அந்தத் தொடர்புகளும் இல்லாது போய்விட்டன.

பலர் தம்மை வெளிப்படையாகக் காட்டி உதவி செய்ய விரும்புவதில்லை.இதனால் அவர்களின் உதவியும் வெளிப்படையாகக் கிடைக்காது போகின்றன.

இந்திய - புலிகள் போரில் மிக நீண்ட காலமாகப் போராட்டத்தில் ஈடுபட்ட, அனுபவம் மிக்க போராளிகளை பெருமளவில் இழந்தோம். இதனால் எமது நீண்ட கால உதவியாளர் பலரின் தொடர்புகள் முற்றாக அற்றுப் போய்விட்டது.

பொதுவாக எமது உதவியாளர்கள் குறித்த குறிப்புக்களை, அவர்களினதும் எமதும் பாதுகாப்புக் கருதி வைத்திருப்பதில்லை. இந்த வகையில் உண்மையான உதவியாளர்களை இனம் காண்பதில் எமக்கு இவ்விதமான பல கஷ்டங்கள் இருக்கின்றன.

இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் நாம் எமது கட்சி அமைப்பை கவனமாகக் கட்டி வருகின்றோம்.

எவ்வளவு தான் நாம் கவனமாக இருந்த போதிலும் சந்தர்ப்ப வாதிகள், துரோகிகள் சிலர், சில வேளைகளில் கட்சியமைப்புக்குள்ளே வந்துவிடுகின்றார்கள். அவர்களைத்தொடர்ந்து இனம்கண்டு நீக்கி வருகின்றோம்.

இந்திய - புலிகள் போரின் போது, சமூக விரோதிகளோடு நின்றவர்கள், மற்றைய குழுக்களின் தீவிர ஆதரவாளர்கள், குறிப்பிட்ட காலத்தின்பின் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிஆகியவற்றில் அங்கம் வகித்தவர்கள் மோசடி, ஊழல், கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை ஆகியவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் போன்றோரை நாம் கட்சி அமைப்பில் சேர்த்துக் கொள்வதை தவிர்க்கிறோம்.

கட்சிஅமைக்கும் ஆரம்ப கட்டத்தில் எல்லோரையும் சேர்த்து வைத்து. சனநாயகம் என்னும் பெயரில், சந்தர்ப்பவாதிகளையும் துரோகிகளையும் கட்சியை நடத்த அனுமதிக்க முடியாது.

இதன் அர்த்தம்; ஆரம்பத்தில் கட்சி அமைக்கும் பணியில் ஈடுபட்டவர்கள் தவிர, மற்றவர்கள் எல்லோரும் சந்தர்ப்ப வாதிகள், துரோகிகள் என்பதல்ல.

எமது போராட்டத்துக்கு என்றும் உதவியவர்களை நாம் இனம் காணாது போனாலும் தொடர்ந்தும் அவர்கள் எமக்கு உதவாமல் இருக்கப் போவதில்லை.

எனவே காலப்போக்கில் நாம் இவர்கள் எல்லோரையும் இனம் கண்டு கொள்வோம்.

படிப்படியாக கட்சி அமைப்பானது விரிவாக்கப்படும். காலப்போக்கில் நான் முன்பு கூறியது போல ஒரு கட்டுக்கோப்பான ஒழுக்கம் நிறைந்த விடுதலைக்காக எதையும் இழக்கத் தயாரான, எமது கொள்கையைப் பூரணமாக ஏற்றுக்கொண்டவர்களைக் கொண்டே ஒரு பரந்து பட்ட அமைப்பைக் கட்டி அமைக்க முடியும்.

ஆரம்பத்தில் சரியாக அடித்தளம் கட்டப்பட்டால் மட்டுமே இது சாத்தியமாகும்.

சாதாரண அரசியல் கட்சியில் இன்று ஒரு தலைமை, நாளை ஒரு தலைமை வரும்.. அந்தக் கட்சி தனது நடவடிக்கைகளால் தன்னை அழித்துக் கொள்ளும் அல்லது மக்களை ஏமாற்றிப் பிழைத்துக்கொள்ளும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னெடுத்துச் செல்லும் ஆயுதப் போராட்டத்திற்கு, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியானது, முழுமையான ஆதரவும் உதவியும் தரும்; அதேவேளை பிரதேச வேறுபாடு, மத, சாதி, பால் வேறுபாடு அற்ற பண்பான ஒரு புரட்சிகர சமூகத்தைக் கட்டி வளர்க்கும் பணியையும் செய்யும்.

எனவே இச் சிற்றூர், வட்ட, மாவட்ட அவைகளில் சந்தர்ப்பவாதத் தலைமைக்கு இடம் கொடுக்கப்படுமானால் அவர்கள் போராட்டத்தை - போராளிகளின் தியாகத்தை விலைபேசி விற்றுவிடுவார்கள்.

சனநாயகம் என்னும் பெயரில், நாம் சந்தர்ப்பவாதத் தலைமைகளை வளர்த்துவிடக்கூடாது. இதில் நாம் அவதானமாக இருக்கின்றோம். ஆனால் நாம் மிக ஆறுதலாக - கவனமாக ஓர் அமைப்பைக் கட்டி வளர்த்தபின் அந்த அமைப்பு தன்னுள் சனநாயக முறையில் தலைமையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதை நாம் விரும்புகின்றோம். இது தான் உண்மையான தாகவும், நேர்மையானதாகவும் இருக்கும்.

பரந்துபட்ட, கட்டுக்கோப்பான அமைப்பை நாம் சில நாளில் கட்டிவிட முடியாது. அதைக் கட்டும்வரை குறிப்பிட்ட சிலரைக் கொண்டே அதை அமைக்கும் பணியை நாம் செய்யலாம்.

அப்பணிதான் இப்போது நடக்கின்றது. எமது போராட்டத்திற்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு, இந்திய அரசு, பல சமூக விரோத அமைப்புக்கள், பெரும் சுரண்டல்காரர்கள் செயல்பட்டு வருகின்றார்கள்.

இவர்கள் எல்லோரும் சேர்ந்து எமது கட்சியின் கட்டுக் கோப்பை சிதைத்து விடாமல் பார்த்துக்கொள்வதோடு, சிறந்த கட்டுக்கோப்பான - எதையும் விடுதலைக்காக இழக்க ஆயத்தமான நிலையில் இந்த அமைப்பைக் கட்டிவளர்க்க, விடுதலையில் அக்கறையுள்ள தமிழீழ மக்கள் அனைவரும் முழுமையாக ஒத்துழைப்புத் தரவேண்டும்.

www.eelamview.com

www.eelamview.com



# எப்போது விடுதலை?

'' என்ன வினோதினி... எப்ப கலியாணச் சாப்பாடு போடப்போறாய்.?''

வினோதினி வெட்கப்படுவாள்...-

நாணம் கலந்த புன்னகை ஒன்றை என்மீது வீசுவாள்...''

'போங்கோ மாமி... உங்களுக்கு எப்பவும் பகிடிதான்..' -என்று செல்லமாய் என்னைக் கோபிப்பாள்...''

-என்றெல்லாம் எதிர்பார்த்தே கேள்வியைப் போட்டேன்.

எதிர்பார்த்தபடி எதுவுமே நடக்கவில்லை.

மாறாக...

சோகம் கலந்த விரக்திச் சிரிப்பு ஒன்றுதான் அவளிடமிருந்து எனக்குப் பதிலாகக் கிடைத்தது.

எனக்கு என்னவோ போலிருந்தது...

ஏதோ விரும்பத்தகாதது நடந்திருக்கிறது என்பதை மட்டும் மனம் புரிந்து கொண்டது.

''ஏன் வினோ? என்ன பிரச்சனை? ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?''

''பிரச்சனை ஒண்டுமில்லை மாமி; இனி எப்பவுமே எனக்குக் கலியாணம் நடக்காது .. என்ரை கலியாணச் சாப்பாடு நீங்க சாப்பிடப்போறது இல்லை...''

''சும்மா இரு பிள்ளை... இப்பிடி அபசகுனமாய்ப் பேசாதை. உன்ரை கலியாணம் போன வருசமே நடந்திருக்க வேண்டியது. உந்த நாசமாய்ப் போன இந்தியன் ஆமி உன்னைப் பிடிச்சதாலைதானே கணங்கிப்போச்சுது...

'' அவங்கள் பிடிச்சதாலை தான் மாமி என்ரை கலியாணமே நிண்டுபோச்சு''

எனக்குள் ஒரே குழப்பம்... எதுவுமே புரியவில்லை...

என்ன சொல்கிறாள் இவள் ?

''என்னடி பிள்ளை... என்ன புதுக்கதையெல்லாம் சொல்லுறாய்...? என்ன நடந்தது...? விவரமாய்ச் சொல்லன்...''

பதைப்புடன் வினோதினியிடம் கேட்கிறேன்.

''அவருக்கு வேறை இடத்திலை பொம்பிளை பாக்கினம்... எங்கடை எழுத்தைத் தள்ளப் போகினமாம்...''

என் இதயத்தில் யாரோ ஆணி அடிக்கிறார்கள்...

வினோவைப் பார்க்கவே பரிதாபமாய் இருக்கிறது.

உலகின் சோகம் முழுவதும் கண்களில் குடிகொள்ள, மரண தண்டனை வழங்கப்பட்ட கைதிபோல் என் முன்னால் நிற்கின்ற இந்தப் பெண் என்ன குற்றம் செய்தாள் ?

என்ன நடந்திருக்கும் ?

''என்னம்மா ஏன் அப்படிச் செய்யினம்? என்ன காரணம்... உங்களுக்கு என்னண்டு தெரியவந்தது ...?''

கனிவாக அவளிடம் கேட்கிறேன்.

''ஆமிக்காரன் பிடிச்சுக் கொண்டுபோய் வைச்சிருந்திட்டு விட்டபடியால் இனி என்னைத் தங்கடை வீட்டு மருமகளாக்க, அவற்ற தாய் தகப்பனுக்கு விருப்பமில்லையாம்... நேற்றுத்தான் ஒரு ஆளிட்டைச் சொல்லி விட்டவையள்...''

சொல்லும்போதே வினோதினியின் குரல் உடைந்து போகிறது... கண்ணீர் ஆறாய் வழிகிறது...

என்னுள் எரிமலை ஒன்று கொதிக்கிறது...

'பாவியள்... இவங்களுக்கு மனச்சாட்சியே இல்லையோ! ஆமிக்காரனைவிட இவங்கள் தான் மோசமானவங்கள்...'

என்னுள் அவர்களைத் திட்டித் தீர்க்கிறேன் -

''கலியாண எழுத்தும் எழுதிப்போட்டு இப்ப வேறை பொம்பிளை தேடுகினமே...? தாய் தகப்பன் சொல்லுகினம் எண்டால் இந்தப் பெடியனுக்கென்ன... பிடிச்ச பிடியாய் நிக்கலாம் தானே.?''

''இல்லை மாமி... அவரும் அப்பிடித்தான் சொல்லுறாராம்...... ஆமிக்காம்பிலை இருந்த பொம்பிளையை இனித்தான் கட்டமாட்டன் எண்டு சொன்னவராம்...''



சொல்லி விட்டுக் குலுங்கிக் குலுங்கி அழுகிறாள் வினோ.

'எங்கடை சமூகத்திலை இனி இப்பிடிப்பட்ட பிரச்சனையும் புதுசாய்க் கிளம்பப் போகுது போலை...'

இந்த வினோதினி என்ன குற்றம் செய்தாள் ?

எங்கள் சமூகத்தில் இன்று இந்த வினோதினியைப்போல இன்னும் எத்தனை 'வினோதினிகள்' இருக்கிறார்கள்?

இவர்களுக்கெல்லாம் எங்கள் சமூகம் இப்படியான 'தண்டனை'களைத்தான் கொடுக்கப் போகிறதா ?

பெண் ஒடுக்குமுறை இந்த ரீதியாகவும் பரிமாணம் பெறப் போகிறதா ?

பல கேள்விகள் என் முன் விஸ்வரூபமாய்......

★ ☆ ☆

88ஆம் ஆண்டின் பிற்பகுதி

பனி படர்ந்த அதிகாலைப் பொழுதுகளில், ஆளை ஆள் பார்க்க முடியாத அடர்த்திமிக்க பனிப்புகார் !நடுவே - இந்திய ஆக்கிரமிப்புப் படையினரின் சுற்றிவளைப்புகள் ஆங்காங்கே தமிழீழப் பிரதேசங்களில் அனர்த்தங்களை விளைவித்துக் கொண்டிருந்த காலப்பகுதி.

அதிகாலை முதல் மாலை ஐந்து மணிவரை நீர்வேலியில் கரந்தன் என்ற சிறிய கிராமம், அன்றைய சுற்றி வளைப்பில் தனது வழமையான செயல்பாடுகளை இழந்து ஸ்தம்பித்துப்போகிறது.

சுற்றி வளைப்பு முடிந்து - இராணுவம் விலக ஆரம்பித்ததும் - மக்கள் புற்றிலிருந்து புறப்பட்ட ஈசல்கள் என அங்குமிங்கும் தமது கருமங்களைப் பார்க்க - ஓடியாடித் திரிய -

ஒற்றையடிப் பாதை ஒன்றின் வழியாக இரண்டு,மூன்று இளைஞர்கள் இரண்டு சைக்கிள்களில் வேகமாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

'சுற்றி வளைப்பு' காரணமாக அத்தனை நேரமும் எங்கோ மறைந்திருந்துவிட்டு வருகிறார்கள் என்பது அவர்களைப் பார்த்தவுடனேயே தெரிகிறது.

எதுவும் பருகாமல் - சாப்பிடாமல் இருந்திருப்பார்கள்...

முகங்களில் களைப்பு.

தங்களுடைய பாசம்மிக்க 'பெடியங்கள்' இவர்கள் என்பது சனங்களுக்குத் தெரியும்.

ஒற்றையடிப்பாதை முடிந்து சற்று அகலமான ஒழுங்கை ஒன்றுடன் சேருமிடத்தில் தான் வினோதினியின் வீடு.

தூரத்தில் வரும்போது வினோதினியின் தந்தை பெடியங்களைக் கண்டு விடுகிறார்...

''பிள்ளை வினோ... குசுக்காய் அடுப்பை மூட்டி, ஒருநாலு, ஐந்து பேருக்குத் தேத்தண்ணி போடு...''

அப்பா இப்படிச் சொன்னால்,வினோதினிக்கு விஷயம் விளங்கிவிடும், வழமையாக இது நடக்கும் நிகழ்ச்சிதான்.

விரைந்து சென்று தேநீர் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபடுகிறாள் -

முற்றத்திலுள்ள அந்த ஓலைக் கொட்டிலினுள் வழ

www.eelamview.com

வாங்கில் 'பெடியங்கள்' அமர்ந்து சற்று ஓய்வெடுக்க -

''இருங்கோ தம்பியவை... உந்தக் கடைக்கு ஒருக்காப் போட்டு வாறன்...'' கூறிவிட்டு வினோதினியின் தந்தை வெளியே போகிறார்.

கோப்பைகளில் தேநீருடன் வினோதினி வரவும் - இராணுவ வாகனமொன்றின் உறுமல் ஒழுங்கையினுள் மிக அருகே கேட்கிறது.

அந்த நேரத்தில் அவ்விடத்தில் இராணுவம் வருமென யாருமே எதிர்பார்க்கவில்லை...

யாரேனும் காட்டிக்கொடுப்பவர்களின் 'கைங்கரியமோ' அல்லது தற்செயலாக நடந்ததோ....

வாகனம் நிற்க-இராணுவத்தினர் குதிக்கும்சத்தம்'தொப்' 'தொப்' எனக் கேட்கிறது.

ஒரு கணப்பொழுதுதான்...

வீட்டின் பின்புற வேலியால் பாய்ந்து - ஓடி, பெடியங்கள் ஒருவாறு தப்பி விடுகிறார்கள்.

வீட்டினுள் புகுந்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு - தேநீர்க் கோப்பைகளும் - வேலியோரத்தில் சாத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கில்களும் 'செய்தி' சொல்லுகின்றன...

பிறகென்ன...

அவர்களுடைய கையாலாகாத் தனத்தின் எதிரொலியாய் வினோதினியும் அவளுடைய பத்து வயதுத் தம்பி குமாரும் அடித்து உதைக்கப்பட்டு - இராணுவத்தினரால் கொண்டு செல்லப்படுகிறார்கள்.

இது நடப்பதற்கு ஒரு வாரம் முன்புதான் வினோதினிக்கும் சந்திரன் என்ற பையனுக்கும் திருமணம் நிச்சயமாகி, திருமணப்பதிவு மிகவும் கோலாகலமாக நடந்து முடிந்திருந்தது.

இரண்டு மாதங்களில் தை பிறந்ததும் திருமணம் நடைபெறுவதாக ஏற்பாடாகியிருந்தது.

விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்த ஒரே காரணத்துக்காக - எமது தமிழீழ மக்கள் அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கொடூரமான சித்திரவதைகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் ஆளாகினார்கள். அத்தனை சித்திரவதையையும் வினோதினியும் அவள் தம்பியும் இராணுவ முகாமில் அனுபவித்தார்கள். தாங்கள் விடுதலைசெய்யப்படுவோமா இல்லையா என்று ஏங்கி ஏங்கியே இவர்களது ஒவ்வொரு நிமிஷமும் இராணுவமுகாமில் வேதனையுடன் கழிந்தது...

இந்திய இராணுவம் எமது மண்ணைவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதனால் - கைதுசெய்யப்பட்டிருந்தவர்கள் பிரிவு பிரிவாய் விடுவிக்கப்பட்டனர்.

வினோதினியும் அவர்களில் ஒருத்தியாய் வெளியே வந்தாள்...

* * *

என் இதயத்தில் பெரிய சுமை ஒன்று புதிதாகப் புகுந்து கனக்கிறது...

அந்நிய இராணுவ அடக்குமுறைகளுக்குஆளாகியவினோதினி இப்போ வெளியே வந்து விட்டாள்.

மற்றவர்களின் பார்வையில் அவளுக்கு 'விடுதலை' கிடைத்துவிட்டது...

ஆனால் உண்மையான 'விடுதலை' அவளுக்குக் கிடைத்ததா? அந்நிய இராணுவ அடக்குமுறையிலிருந்து விடுபட்டு - இப்போ தனது சொந்த மக்களின் சமூக ஒடுக்கு முறைகளுக்கு ஆளாகியிருக்கிறாள்...

ஆக - அவள் வரையில் இடமாற்றம் நிகழ்ந்திருக்கிறதே தவிர விடுதலையல்ல... அவளுக்குஎப்போ துவிடுதலை கிடைக்கப் போகிறது ? அது கிடைக்குமா? அல்லது கிடைக்காமலே போய் விடுமா?

ஒரு ஆண் இராணுவச் சித்திரவதைகளுக்கு ஆளாகும் போது அவனை அனுதாபத்துடன் பார்க்கும் எங்கள் சமூகம் - அதே நிலைமை ஒரு பெண்ணுக்கு வரும்போது தனது 'சந்தேகப்பார்வையை' அவள்மேல் ஏன் வீசுகிறது?

அதே அனுதாபத்தை இந்தப் பெண்மீதும்காட்டுவதற்கு இவர்களுக்கு ஏன் முடியவில்லை?

திருமணப் பதிவுசெய்து சட்ட ரீதியாகவும் மனசாலும் வினோதினியைத் தனது மனைவியாகஏற்றுக்கொண்ட சந்திரன்-இராணுவ முகாமில் கைதியாக வினோதினிஇருந்த காரணத்தினால் அவளை விவாகரத்துச் செய்து வேறொரு பெண்ணைப் திருமணம் செய்யப்போவதை எமது சமூகம் வெறுமனே கைகட்டி பார்த்துக் கொண்டு தானே நிற்கப்போகிறது? பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளவில்லை என்று காட்டிக் கொண்டாலும், எமது சமூகம் உள்ளூர அதை ஏற்றுக்கொள்கின்றது என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

தான் செய்யாத பிழைக்கு வினோதினி 'சிலுவை' சுமக்கப் போகிறாள்... எமது சமூகத்தில் இன்னும் எத்தனை 'வினோதினிகள்' இப்படிச் 'சிலுவை' சுமக்க இருக்கிறார்கள்......?

இன்று...?

ஆணுக்கு ஒரு நீதி: பெண்ணுக்கு ஒரு நீதி !

எமது சமூகத்தில் புரையோடிப் போயிருக்கிற புற்றுநோய் இது.


வெறும் 'கதிர் வீச்சு' இதைக் குணப்படுத்தி விடாது!

★

www.eelamview.com



# தர்மச் சக்கரம்?



உண்மைக்கென அரிச்சந்திரன் எனும் கதாபாத்திரத்தை வடித்து, அதில் பெருமை காணும் நாடு இந்தியா. இளம் வயதில் தான்பார்த்த அரிச்சந்திர நாடகம்தான், அக்காலத்தில் தனது கொள்கையை வகுக்கக் காரணமாய் இருந்ததென மஹாத்மா காந்தி தனது சுயசரிதையில் கூறியுள்ளார்.

ஆனால் தமிழீழ மண்ணில் ராஜீவ் தலைமையிலான ஆட்சியாளர்கள் புரிந்த அனர்த்தங்களும், இந்தியாவின் தொலைக்காட்சி, வானொலி என்பன எழுப்பிய உண்மைக்குப் புறம்பான அலறல்களும் அரிச்சந்திரனையும், மஹாத்மா காந்தியையும் கேள்விக்குறியாக்கிவிட்டன.

இதன் உண்மையை உணரும் தேசபக்திமிக்க ஒவ்வொரு இந்தியனும், அல்லது குறைந்த பட்சம் மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு இந்தியனும் வெட்கித் தலைகுனிவான் என்பது வெளிப்படை.

இந்திய ஆட்சியாளர்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தைக்கும் நாம் எதிர் அர்த்தம்தான் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் எமது மக்கள் மத்தியில் இப்போது தோன்றியுள்ளது என்பதை இந்திய தேசபக்தன் ஒருவனுக்கு வேதனையுடன் எடுத்துக்கூறவேண்டியுள்ளது.

கடந்தகாலம் முழுவதும் இந்திய ஆட்சியாளர்கள் இலங்கைத் தீவின்மீதும், எங்கள்மீதும் மேற்கொண்ட நடவடிக்கைகள் எமக்கு இதனைத்தான் வற்புறுத்தி நிற்கின்றன.

இந்தியத் தேசியக் கொடியில் ''தர்மச் சக்கரம்'' இருப்பதைக் கண்டு ஒரு காலத்தில் எமது மக்கள் உள்ளூர மகிழ்ச்சியும் பெருமையும் கொண்டார்கள். ஆனால், எமது மண்ணில் இந்திய இராணுவம் புரிந்த அனர்த்தங்களைப் பார்த்த போது, தர்மச் சக்கரத்தின் மீது எமது மக்களுக்கு பலத்த சந்தேகம் எழுந்தது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகச் சக்கரவர்த்தி, தர்மச்சக்கரத்தைத் தனது சின்னமாக ஏந்திய வரலாற்றையும், பௌத்த தர்மப் பரம்பல் என்ற அழகிய பசுமையான பெயரால், இலங்கைத் தீவில் தனது ஆதிக்கத்தை விஸ்தரித்த விதத்தையும் எண்ணிப்பார்க்கின்றோம்.

தம்ம விஜயத்தை மேற்கொள்ளுமாறு ''மகிந்த தேரோ'' தலைமையில் இலங்கைக்கு ஒரு தூதுக்குழுவை அசோகச் சக்கரவர்த்தி அனுப்பிவைத்ததாகவும், அப்போது இலங்கையில் அனுராதபுரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்த 'திஸ்ஸ' எனும் மன்னனை ''மகிந்த தேரோ பௌத்தனாக மதம் மாற்றி, ''தேவநம்பிய'' என்ற பட்டப் பெயருடன் மீள்முடிசூட்டியதாகவும், அதற்குப் பதிலாக தேவநம்பிய திஸ்ஸ மன்னன் அசோகச் சக்கரவர்த்திக்குச் சில பரிசுப்பொருள்களைக் கொடுத்து அனுப்பியதாகவும் அப் பரிசுப்பொருள்களுள் ஒன்று ''இளமையின் இதழ் விரியும் பருவக் கன்னி ஒருத்தி'', என 'மஹாவம்சம்' XI ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. பௌத்த தர்மத்தை பெரு விருப்புடன் ஏற்றுக்கொண்ட ஒரு மன்னன், பௌத்த தர்மத்தை பெருவிருப்புடன் பரப்பும் ஒரு சக்கரவர்த்திக்கு அனுப்பி வைக்கக்கூடிய ஒரு பரிசுப் பொருளா இது? உண்மையில் இவை பரிசுப் பொருள்களல்ல; திறைப் பொருள்கள் என்றே வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். ஆகவே தர்மம் என்ற பெயரில் ஓர் ஆதிக்கப் பரவலே இங்கு நிகழ்ந்துள்ளதெனலாம்.

> இந்திய தேசியக் கொடியில் 'தர்மச்சக்கரம்' இருப்பதைக் கண்டு ஒரு காலத்தில் எமது மக்கள் உள்ளூர மகிழ்ச்சியும், பெருமையும் கொண்டார்கள். ஆனால், எமது மண்ணில் இந்தியப் படைகள் புரிந்த ஆக்கிரமிப்பைப் பார்த்தபோது தர்மச் சக்கரத்தின் மீது எமது மக்களுக்கு பலத்த சந்தேகம் எழுந்தது-

1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பொது நூலகம் உட்பட யாழ். நகரின் பல பகுதிகள் இலங்கைப் பொலிசாரால் எரிக்கப்பட்டதையும், இராணுவ அனர்த்தங்களையும் தொடர்ந்து, அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், இந்தியா சென்று, அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தியைச் சந்தித்து எமக்கு ஏற்பட்ட துயரங்களை விளக்கமுற்பட்டார். அந்த வேளை அமிர்தலிங்கத்தை நோக்கி, இந்திரா காந்தி அம்மையார் ஒரு குளிர்ந்த வார்த்தையை உதிர்த்தார். அதாவது ''நீ தென்னாசியாவிலுள்ள ஒரு தலைசிறந்த இராஜதந்திரி'' என்பதே அந்த வார்த்தையாகும்.

அமிரிடமிருந்த தமிழீழக் கோரிக்கையை கைவிடப் பண்ணி அவரைத் தனது கைக்குள் போடும் நோக்கத்துடன் இந்திரா சூடிய புகழாரமகுடத்தை அமிர் நம்பி, தலையிற் சுமக்கலானார். திஸ்ஸ மன்னனுக்கு அசோகச் சக்கரவர்த்தி ''தேவநம்பிய'' என புகழாரம் சூட்டியது போலவே அமிருக்கும், இந்திராகாந்தி ''தலைசிறந்த இராஜ தந்திரி'' எனப் பொய் மகுடம் சூட்டினார்.

உணவுப் பொட்டலங்களை வானத்திலிருந்து போட்ட போது, எம்மைப் பாதுகாக்க இந்தியா வந்துவிட்டதாக தமிழீழ மக்கள் முதலில் நம்பினர். உணவுப் பொட்டலங்கள் பின்பு குண்டுப் பொட்டலங்களாக வெடிக்குமென அவர்கள் நினைத்துப் பார்க்கவேயில்லை. இப்போது இவை அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும்போது பின்வரும் முடிவுகளுக்கே நாம் வரமுடிகின்றது.

## இந்திய ஆட்சியாளரின் அகராதியில்

தர்மப் பரம்பல் என்பது
ஆதிக்கப் பரம்பல் என்றும்

தேவநம்பிய ---
அடிமையானவன் என்றும்

சிறந்த இராஜதந்திரி என்பது
. அசல் ஏமாளி என்றும்

உணவுப் பொட்டலம் -
குண்டுப் பொட்டலம் என்றும்


தர்மச் சக்கரம் -
கொலைச் சக்கரம் என்றும்

உண்மை -
படுபொய் என்றும்

இவ்வாறு அர்த்தம் கொள்ள வேண்டிய வேதனை மிகுந்த நடைமுறையினை இந்திய ஆட்சியாளர்கள் எம்முன் நிகழ்த்திக் காட்டியுள்ளனர். ஆனால் இந்தியத் தேசியக் கொடியிலுள்ள தர்மச் சக்கரம் ஆட்சியாளரால் மாசுபடுத்தப்பட்டுள்ள நிலையைக் களைந்து, தர்மச் சக்கரத்தை அதற்கே உரிய புனிதமான நிலைக்கு உயர்த்த - தேசபக்தியும், மனச்சாட்சியும் நிறைந்த ஒவ்வொரு இந்தியனும் முயலவேண்டும். இந்தியக்கொடி புனிதமாகட்டும். எமக்கு இழைத்த அநீதிகளைக் களைந்து, எமது மனதில் ஏற்பட்டுள்ள புண்ணை ஆற்ற இந்தியத் தேசபக்தர்கள் இனி யாவது முயல்வார்களென நம்புவோமாக.

★

புயலின் கரங்களிலே ...
பூவொன்று சிரிக்கிறது .
அயலை விடிவு செய்த
ஆதவனின் கரங்களிலே ..
சிறுமி எழுந்து நின்று சிரிக்கின்றாள்
எரிமலைக்குக் கூட
இதயம் இருக்குமென்பார்
சரிதான்.
இவன் அதற்குச் சாட்சி.
ஆம்; இவன் தான்
திருமலையில் எழுந்த எரிகுன்றம்.
பூவுக்குள் பூகம்பம் என்பார்கள்
இங்கே பார்.
பூகம்பம் கையில் பூவொன்று சிரிக்கிறதே!
தன் பூவைத்தூக்கி தான் மகிழமுன்னரே
கண் மூடிப்போன
காவியத்தின் கரங்களிலே...
மென் பூவா? யார் வீட்டில்
முகையவிழ்ந்த பூவிதுவோ?



www.eelamview.com

www.eelamview.com



# முள்ளிக்குளம் புளொட்

***20-05-1989 அன்று மன்னார் மாவட்டத்திலுள்ள முள்ளிக்குளம் எனும் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த 'புளொட்' கொலைஞர்களின் பிரதான முகாம் ஒன்று எமது தோழர்களால் நிர்மூலமாக்கப்பட்டது. இதில் 42 புளொட் கொலைஞர்கள் கொல்லப்பட்டனர்.***

***முள்ளிக்குளம் கிராமத்திலிருந்து 'புளொட்' கும்பலை விரட்டி அடித்து துரோகிகளின் பிடியில் இருந்து அக்கிராமத்தை விடுவிக்கும் பணியில் ஈடுபட்ட எமது தோழர்களில் பதினொருவர் வீரமரணமடைந்தனர்.***

## முத்துக்குளிப்பு

முள்ளிக்குளம் - மன்னார் மாவட்டத்தின் கரையோரக் கிராமங்களில் ஒன்று. இது, மன்னார் மாவட்டத்தையும்-புத்தளம் மாவட்டத்தையும் பிரிக்கும் ஓர் எல்லைக் கிராமம்.

முத்துக்குளிப்பதற்கு இலங்கையிலே பெயர்போன இடம் மன்னார் அவ்விதம் மன்னார் என இனம் காட்டப்படுவது, இந்த முள்ளிக்குளக் கிராமத்தையே ஆகும். இதை அண்டியுள்ள கடலில்தான் முத்துக்குளிப்பு நடைபெற்றது. இதன் காரணமாக அக்கிராமம் ஒரு துறைமுகமாகவும் செயற்பட்டு வந்திருக்கிறது.

அத்துடன் சிறீலங்கா அரசினால் வனவிலங்குச் சரணாலயம் எனப் பிரகடனப் படுத்தப்பட்ட வில்பத்துக் காட்டின் ஒரு பகுதியும் இக் கிராமத்தை அண்டியபடி சென்று கொண்டிருக்கிறது.

## தொலைபேசி வசதி

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் யாழ் - கொழும்பு பிரதான பாதை ஒன்று இக் கிராமத்தினூடாகச் சென்றது. இக் கிராமத்துக்கு இருந்த தொலைபேசி வசதியை திருப்பிப்பதாக, தூர்ந்து போய்க் காணப்படும் அப் பிரதான பாதையின் ஓரங்களில் சிதைந்த நிலையில் தொலைபேசிக் கம்பங்கள் இன்றும் இருக்கின்றன

இவ்வாறு, ஒரு காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த முள்ளிக்குளம் படிப்படியாக தனது பிரபல்யத்தை இழந்து வந்தது. இலங்கைத்தீவு சுதந்திரமடைந்த பின்னர் முத்துக் குளிப்புத் தொழில் ஊக்குவிக்கப் படாததாலும், இதன் காரணமாக இந்தியா, மற்றும் அரபு நாடுகளில் இருந்து வந்த முத்துவியாபாரிகளின் வருகை படிப்படியாகக் குறைந்ததாலும் ஈற்றில் இத்தொழில் கைவிடப்பட்டது.

இவ்விதம் முள்ளிக்குளம் கிராமம் தனது பிரபல்யத்தை இழந்ததுடன், இக் கிராமத்தை அண்டி ஏற்படுத்தப் படும் சிங்களக் குடியேற்றம் காரணமாக முள்ளிக்குளம் கிராமம் தனிமைப் படுத்தப் பட்டிருந்தது.

## புளொட் கும்பலின் தளம்

இவ்விதம் காடுகளின் மத்தியில் தனிமைப்படுத்தப் பட்டு, தனித்திருந்த அமைதியான இக்கிராமம் 1988 இன் பிற்பகுதியில் புளொட் (P.L.O.T) கும்பலின் முக்கிய தளமாக மாறியது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்ற போர்வையில் இந்திய இராணுவம் எமது மண்ணில் வந்திறங்கி, இங்கு நடந்து கொண்டிருந்த விடுதலைப் போராட்டத்தை வஞ்சகமாக ஒடுக்கச் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தது.

அதன் ஓர் அங்கமாகத் தான் சமூகவிரோதிகள் என்று மக்கள் முன் இனங்காட்டப் பட்டு எம்மால் நிராயுதபாணிகளாக்கப்பட்ட புளொட், ஈ. பி. ஆர். எல். எப்., ரெலோ, ஈ. என். டீ. எல். எப். ஆகிய ஆயுதக் கும்பல்களுக்குப் பாதுகாப்பளித்து மீண்டும் எமது மண்ணுக்கு அழைத்து வந்த இந்தியப் படை, அவர்களுக்கு ஆயுதங்களை வழங்கி, விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்களைக் கொலை செய்ய ஏவி விட்டது. அதன் மூலம் சகோதரச் சண்டை நடைபெறுகிறது என்று காரணம் காட்டி, மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை உண்டு பண்ணி, அதன்பின் அமைதியை நிலைநாட்டப் போகின்றோம் என்று கூறிப் புலிகளை ஒழித்துவிடலாம் என இந்திய ராஜதந்திரிகள் கணக்குப் போட்டனர்.

## துரோகக் கும்பல்களின் அராஜகங்கள்

இதன் மூலமாகவே மன்னார் மாவட்டத்திலுள்ள பண்டிவிரிச்சான் என்ற இடத்தில் நிராயுதபாணிகளாக நின்ற எமது தோழர்கள் இருவர் புளொட் கும்பலைச் சேர்ந்தவர்களால் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டார்கள்.

இதேபோன்று நிராயுதபாணிகளாக நின்ற நமது தோழர்கள் பலர், அடுத்தடுத்துப் பல்வேறு மாவட்டங்களில் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையிலே மீண்டும் நாம் இத்துரோகக் கும்பல்களுக்கு எதிராக ஆயுதத்தைக் கையில் எடுத்தோம்.

மேற் குறிப்பிட்ட பண்டிவிரிச்சான் கொலைகளுக்குக் காரணமாக இருந்த புளொட் கொலைஞர்கள் அருகிலிருந்த தம்பனைக் கிராமத்திலே முகாம் அமைத்தனர். இந்தத் தம்பனைப் புளொட் முகாம் மீது ஒரு திடீர்த் தாக்குதலை நடத்தி அவர்களை அக் கிராமத்தில் இருந்து விரட்டியடித்தோம். இதே போல் தமிழீழத்தின் பல இடங்களிலும் புளொட் மீது தாக்குதல் மேற்கொண்டு அவர்களை அந்தந்த இடங்களில் இருந்து விரட்டியடித்தோம்.

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, ஈ.என்.டீ.எல்.எப்., போன்ற கும்பல்களைப் பயன் படுத்திப் புலிகளை அழிக்க இந்தியா தீட்டிய திட்டங்களுக்கு எதிராக விரைவான நடவடிக்கைகளை எடுத்து முறியடித்தோம்.

## இந்தியப் படைகளின் போர்ப்பிரகடனம்

இந்தநிலையில் இந்திய அரசானது, தனது படைகளை நேரடியாகவே ஏவிவிட்டு விடுதலைப் புலிகளை அழிக்க முடிவு செய்து 1987 ஆம் ஆண்டு ஐப்பசி 10ஆம் திகதி போரைத் தொடங்கியது.

நாம், எமது சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி, இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போர் புரிந்தோம்.

போருக்கான சர்வதேச விதிகளையும் யுத்த தர்மங்களையும் மீறி, இந்தியப்படைகள் எமது மக்களைக் கொன்றொழித்தன; இனப்படுகொலை புரிந்தன.

மக்கள் உணவின்றித் தவித்தனர். - மக்களுக்கு உணவுப் பொருள்கள் போய்ச் சேர்வதை இந்தியப் படைகள் திட்டமிட்டுத் தடுத்தன. விவசாயிகள் தமது நிலங்களில் பயிரிடாதவாறு தடுக்கப்பட்டனர். இந்தியப்படை மக்களை வேண்டுமென்றே பட்டினி போட்டது.

இந்தியப்படை, பாடசாலைகளையும் வைத்தியசாலைகளையும் இயங்கவிடாது தடுத்தது.

போரில் கொல்லப்பட்ட மக்களினதும், போராளிகளினதும் உடல்களை வாகனங்களில் கட்டி இழுத்தும், வாகனங்களால் நெரித்தும், இந்தியப் படை தனது காட்டுமிராண்டித் தனத்தைக் காட்டியது. இதேசமயம்,

இந்திய ஆக்கிரமிப்புக்கு ஆதரவு தராதவர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

போராளிகளினதும், தேசபக்தர்களினதும் குடும்பங்கள் கொலைசெய்யப்பட்டன.

இவற்றிலிருந்து தப்புவதற்காகத் தமது சொந்த இடங்களை விட்டுப் பாதுகாப்புத் தேடி ஓடிய பொதுமக்களை இந்தப் புளொட் கும்பல்கள், ஆக்கிரமிப்பாளர்களிடம் காட்டிக் கொடுத்தன. அவர்கள் கொண்டு சென்ற பொருள்களை வழியில் வைத்துக் கொள்ளையடித்தார்கள். இவர்களை ஏற்றிச் சென்ற வாகனச் சாரதிகளும் நடத்துனர்களும் தாக்கப்பட்டனர்.

இந்தியப் படையும் துரோகக் கும்பல்களும் எமது மக்களின்மீது திணித்துக் கொண்ட யுத்தச் சுமைகளைக் குறைப்பதற்காக இயலுமான வரை நாம் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு மேற்கொண்டோம்.

வவுனியா - மன்னார் வீதியில் கொள்ளை நடவடிக்கைகளைக் குறைப்பதற்காக, கொள்ளைகளில் ஈடுபட்டு வந்த புளொட் கும்பல்கள் மீது சிறிய அளவிலான சில தாக்குதல் நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டோம்.

இதன் மூலம் வவுனியா - மன்னார் பிரதான பாதையில் புளொட் கும்பல் வைத்திருந்த ஆதிக்கத்தைப் பெருமளவில் தகர்த்து எறிந்து சுதந்திரமான போக்குவரத்துக்கு வழி சமைத்தோம்.

இதன் பின்னர் புளொட் கும்பல் தமது முகாமை முள்ளிக் குளம் பகுதிக்கு மாற்றியது. இதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு.

## தலைமைப்போட்டி


இந்திய அரசின் கைக்கூலிகளாக இருந்த கும்பல்களுக்கு மத்தியில் தலைமைப் போட்டி ஒன்று இருந்தது. அதாவது புளொட். ஈ.பி.ஆர்.எல்.எப். ரெலோ. ஈ.என்.டீ.எல்.எப். ஆகிய கும்பல்களுக்குத் தலைமை வகிப்பதில் புளொட் இற்கும் ஈ. பி. ஆர். எல். எப் இற்கு மிடையில் போட்டி இருந்தது. இதன் காரணமாக இக்கும்பல்கள் தமக்குள் மோதிக்கொண்டன. இம் மோதல் காரணமாக இவர்களுக்கு மத்தியில் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஆனாலும், இந்தியப்படையின் கைக்கூலிகளான ஈ.பி. ஆர்.எல்.எப். கும்பல்களுக்கு அந்த மகுடம் கிடைக்க, புளொட் கும்பல் சிறீலங்கா இராணுவத்தின் பக்கம் சென்றது.

எனவே, சிறீலங்கா இராணுவத்துடன் தொடர்புகளை வைத்திருக்கவும், தமது பாதுகாப்பிற்காகவும், எல்லையோரக் கிராமமான முள்ளிக் குளத்தைத் தமது தளமாக்க புளொட் கும்பல் தீர்மானித்தது.

இந்தியப் படையின் கூடாரங்களில் இருந்தபடி ஈ.பி.ஆர். எல்.எப், ஈ.என்.டி.எல்.எவ்., ரெலோ போன்ற கும்பல்கள் எமது மக்களை இம்சித்துக் கொண்டிருக்க, சிங்களப் படைகளின் அரவணைப்பில் இருந்தபடி புளொட் கும்பல்கள் எமது மக்களைத் தொந்தரவு செய்து கொண்டிருந்தன.

முள்ளிக்குளம் ஒரு எல்லைக் கிராமம். தம்மீது புலிகள் ஒரு தாக்குதலை நடத்தும் சந்தர்ப்பத்தில், சிங்கள இராணுவத்திடம் இருந்து உதவிகளைப் பெறவும் அல்




முள்ளிக்குளம் புளொட் முகாமின் மாதிரி வரைபடம்

www.eelamview.com

www.eelamview.com



# முகாம் தாக்குதல் ....

லது சிங்கள இராணுவத்திடம் ஓடிச்சென்று தஞ்சம் அடையவும் அது வாய்ப்பாக இருக்கும். அத்துடன் கடல் வழியாகக் கடத்தல் வேலைகளைச் செய்யவும் அது வசதியாகவும் இருந்தது.

இவற்றைவிட இன்னுமொரு காரணியும் உண்டு. இந்தியப் படைகளுடனான யுத்த காலத்தில் முள்ளிக்குளம் கிராமத்தில் எமது இயக்கத்தின் செயற்பாடு இல்லாதிருந்ததும் ஒரு முக்கிய காரணமாகும். இந்தியப் படையுடனான கடுமையான போர் காரணமாக - எமது போராளிகள் பலர் வீரமரணம் அடைந்ததால் ஏற்பட்ட ஆள் பற்றாக்குறை காரணமாக, தமிழீழத்தின் சில பகுதிகளில் எமது செயற்பாடு இருக்கவில்லை. இதில் இக் கிராமமும் ஒன்று.

இவ்விதம் மேற்குறிப்பிட்ட காரணிகளின் அடிப்படையில் முள்ளிக்குளம் கிராமம், தமக்குப் பாதுகாப்பானதும் வசதியானதும் என புளொட் கும்பல் கருதியது. சிறீலங்கா, இந்தியப்படைகளின் உதவியுடனும், ஆசீர்வாதத்துடனும் இக்கிராமத்தை தமது தளமாக்கி எம்மைத் தொல்லைப் படுத்தியும் மக்களைக் கொடுமைப்படுத்தியும் வந்தனர்.

## முகாமின் வடிவமைப்பு

சிறீலங்கா அரசின் மாவட்ட எல்லைகளின்படி, மன்னார்-புத்தளம் மாவட்டங்களைப் பிரிக்கும் எல்லையாக ஒரு ஆறு ஓடுகிறது. இவ் ஆற்றிலிருந்து பெரியகுளம் என்ற குளத்திற்கு வரும் நீர் அங்கிருந்து சில மைல்களுக்குள் இருக்கும் மறிச்சுக்கட்டி என்ற சிறிய குளத்தையும் நிரப்பி பின் அங்கிருந்து முள்ளிக்குளத்தை அடைகிறது. இம் முள்ளிக்குளத்தில் இருந்து மேற்கே 800 யார் தொலைவில் இந்துமா சமுத்திரம் உள்ளது.

முள்ளிக்குள அணைக்கட்டின் மீதே இந்தப் புளொட் முகாம் அமைந்துள்ளது. நான்கு பெரிய புளிய மரங்களை உள்ளடக்கியுள்ள சிறிய நிலப்பரப்பில் நான்கு புறமும் அணைக்கட்டுப் போன்று மண் அமைக்கப்பட்டுள்ளது. புளியமரத்துக்குக் கீழே நிலத்தைத் தோண்டி அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம் முகாமின் தென்பகுதி, வயல் வெளியையும், கிழக்குப் பகுதி முள்ளிக் குளத்தையும், அதற்கு அப்பால் கிராமத்தையும் கொண்டுள்ளது. வடக்குப் பகுதியும், மேற்குப் பகுதியும் வெறும் தரிசு நிலமாக உள்ளன.


இவ்விதம் எவரும் எளிதில் புகுந்து விடாதபடி இந்த முகாம் நான்குபுறமும் நன்கு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இம்முகாமின் மேற்கு, தெற்குப் பகுதிகளை நோக்கிச் சக்தி வாய்ந்த 30 கலிபர் தானியங்கி இயந்திரத் துப்பாக்கிகள் இரண்டு பொருத்தப்பட்டிருந்தன. அத்துடன் தென்பகுதியில் ஒரு மோட்டார் செல் ஏவு தளமும் இருந்தது. இவை தவிர 15 இற்கு மேற்பட்ட துப்பாக்கி சுடு தளங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

இம்முகாமுக்கு வெளியே கிளைமோர், சிலிண்டர் போன்ற கண்ணிகளும் வைக்கப்பட்டிருந்தன. இக்கண்ணி வெடி வயலானது (MINES-FIELD) இம்முகாமைச் சுற்றி சுமார் 50 யார் சுற்றுவட்டத்தில் இருந்தது. அது 100 இற்கும் மேற்பட்ட கண்ணி வெடிகளைக் கொண்டிருந்தது. இக்கண்ணிகளுக்குத் தேவையான மின்சாரம் முகாமுக்குள் இருந்து மின் வயர்கள் மூலம் உருமறைப்புச் செய்யப்பட்டு கண்ணிகளுடன் இணைக்கப்பட்டு இருந்தது. தேவை ஏற்படுகின்ற போது இவற்றை இயக்கி வெடிக்க வைத்து, தாக்குதல் புரிபவர்களுக்குப் பெரிய இழப்புகளை ஏற்படுத்தலாம்.

இம்முகாம் தொடர்ந்து உயிர் வாழ்ந்து பலமடையுமானால், அது தமிழீழ மக்களுக்கும், விடுதலைப் போராட்டத்துக்கும் அச்சுறுத்தலாக அமையும் என நாம் கருதினோம்.

மேலும் பயங்கரக் கேடியும், கொலைகாரனுமான புளொட்டைச் சேர்ந்த சங்கிலி அல்லது டம்பிங் கந்தசாமி எனப்படுபவன் அந்த முள்ளிக்குள முகாமிலிருந்து தான் செயற்பட்டான்.



தாக்குதலில் வீரமரணமடைந்த எமது தோழர்கள் பதினொருவரின் நினைவுத் தூண்.

## யார் இந்த சங்கிலி அல்லது "டம்பிங்" கந்தசாமி

யாழ். மாவட்டத்திலுள்ள சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கிலி, புளொட் கும்பலின் ஆரம்பகால உறுப்பினராவான். அன்றிலிருந்து அவன் ஒரு கொடூரமான கொலைகாரனாகவும், தனது இயக்க உறுப்பினர்களையும், பொதுமக்களையும் சித்திரவதை செய்து கொல்லும் ஒரு மனோ வியாதி பிடித்த மிருகமாகவுமே செயல்பட்டான். அவன் புரிந்த கொலைகள் அனைத்திலுமே கொடூரம் தாண்டவமாடும்.

## சுழிபுரம் கொலைகள்

1984ஆம் ஆண்டு சுழிபுரம் என்ற இடத்தில் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த எமது இயக்கத்தைச் சேர்ந்த நிராயுதபாணிகளான 6 தோழர்கள் சங்கிலி தலைமையில் வந்த புளொட் கொலைஞர்களால் சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டனர். அவர்களின் உடல்கள் கண்ட துண்டமாக வெட்டப்பட்டன. ஒரு தோழனது ஆண் உறுப்பு அறுக்கப்பட்டு, வாய்க்குள் திணிக்கப்பட்டிருந்தது. இவ்விதம் சித்திரவதை செய்து கொன்ற பின், எல்லோரையும் ஒரு கிடங்கிற்குள் போட்டுப் புதைத்தனர். இதனை நேரில் கண்டதற்காக ஒரு வயோதிபரையும் வெட்டிக் கொன்றுவிட்டு இவர்களுடன் போட்டுப் புதைத்தனர். இது பின்னர் மக்களால் கண்டு பிடிக்கப்பட்டது. புளொட் கும்பலின் உண்மைச் சொருபத்தை மக்கள் நேரிலே கண்டனர்,

## புளொட்டின் உள்ளேயே சித்திரவதைகள்

1984ஆம் ஆண்டு, 1985ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் விடுதலை வேட்கையுடன் புளொட் இயக்கத்திற்குள் சென்ற 200 இற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கொடூரமான சித்திரவதையின் பின் கொல்லப்பட்டனர். புளொட் தலைமையின் உத்தரவின் பேரில் இக் கொலைகளைச் செய்தவன் சங்கிலிதான். இவ் இளைஞர்களைச் சித்திரவதை செய்து கொல்வதற்கென்றே சித்திரவதை முகாம்களை புளொட் கும்பலினர் தமிழ் நாட்டில் அமைத்தனர். தமது இயக்க அங்கத்தவர்களைக் கொலை செய்கின்ற அந்தத் துயர சம்பவத்தில் சங்கிலி முக்கிய பங்கை ஏற்றிருந்தான். இதனாலேயே அவனுக்கு டம்பிங் கந்தசாமி (Dumping) என்ற பெயரும் உண்டாகியது.

மேலும், 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்துடன் இந்திய அரசிடம் ஆயுதங்களை ஒப்படைத்து நிராயுதபாணிகளாக நின்ற வேளையில் எமது தோழர்கள் 18 பேர் துரோகக் கும்பல்களால் கொல்லப்பட்டதை மக்கள் நன்கறிவார்கள். மன்னார் மாவட்டத்தில் உள்ள பண்டிவிரிச்சான் என்ற இடத்தில், ஒரு வீட்டில் நிராயுதபாணிகளாக நின்ற எமது இரண்டு தோழர்கள் சங்கிலியின் தலைமையில் வந்த புளொட் கும்பலால் வெட்டிக் கொல்லப்பட்டனர். அந்தப் புளொட் கும்பலினர் அவர்களை அவ் வீட்டின் அறைக்குள் வைத்து, அவர்களது மண்டை ஒட்டைப்பிளந்து மூளையை எடுத்து அவ் வீட்டுக்குப் பின்னாலிருந்த வவுனியா - மடு பிரதான வீதியில் ஒரு மரத்தின் கீழே போட்டுவிட்டுச் சென்றனர். இக் கொடூரமான கொலைக்குள்ளான இரு தோழர்களுள் ஒருவரான தட்சணாமடுவைச் சேர்ந்த "டென்சில்" என்ற போராளி, நோய்காரணமாகப் படுத்த படுக்கையாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விதம் பயங்கரக் கொலைகாரனாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த சங்கிலி உட்பட இன்னும் பல கொலைஞர்களும் அந்த முகாமில் இருந்தனர்.

## முகாம் தாக்குதலுக்கான காரணிகள்

இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கும், அதன் அடிவருடிக் கும்பல்களுக்கும் எதிராகவும், மறுபுறத்தில் சிங்களப் படைகளுடனும் போரிட்டுக் கொண்டிருந்த நாம், பலமடைந்து கொண்டு வந்த முள்ளிக்குள புளொட் முகாம் மீது நடவடிக்கை எடுக்கத் தாமதிப்போமானால் சிங்களப்படைகளினால் ஆயுதமயமாக்கப்பட்டுக் கொண்டிருந்த புளொட் கும்பல், சிங்களப் படைகளுடன் சேர்ந்து எமக்கெதிராக ஒரு யுத்தமுனையைத் திறப்பார்கள் என்பதை நாம் உணர்ந்தோம்.

இதே காலகட்டத்தில் ஸ்ரீலங்கா அரசுடனான எமது பேச்சுவார்த்தையானது சிறீலங்காப் படைகளுடனான யுத்தமுனையைத் தற்காலிகமாக மூட வழிவகுத்தது.

இந்த நிலையில் தான் வவுனியா செட்டிக்குளம், முசல் குத்திப் பகுதியிலும், மன்னாரில் குஞ்சுக்குளம், முள்ளிக்குளம் பகுதியிலும் புளொட் கும்பலினரின் ஆதிக்கம் மெல்லமெல்ல அதிகரித்துக் கொண்டிருந்தது. இவர்களிற்குச் சிறீலங்காராணுவம் சகல உதவிகளையும் வழங்கி, தனது செல்லப்பிள்ளையாக வைத்திருந்தது.

இக்காரணங்கள் முள்ளிக்குளம் புளொட் முகாம்மீதான உடனடித் தாக்குதலின் தேவையை எமது இயக்கத்துக்கு ஏற்படுத்தியது.

அவ்விதம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் திறக்கப்படவிருந்த ஒரு பலமான யுத்தமுனையைச் செயற்பட விடாமல் தடுக்க முடியும் என்பதையும் புரிந்து கொண்டோம்.

துரோகிகள் எமது மண்ணிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்றகோட்பாட்டுடன், மேற்குறித்த காரணிகளும் புளொட் முகாம் மீதான தாக்குதலை விரைவுபடுத்தியது.

## எமது வேவு நடவடிக்கை

தாக்குதலுக்கான முடிவை எடுத்தபின் முள்ளிக்குளம் முகாம் மீது வேவு நடவடிக்கையை மேற்கொண்டு அதன் பலம், பலவீனம் என்பவற்றை அறிந்து கொண்டோம்.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று புளொட் முகாமைச் சுற்றியிருந்த பாதுகாப்பை விட மேலதிகமாகவும் சில ஆட்களை முகாமுக்கு வெளியே சுமார் அரை மைல் தூரத்தில் நிறுத்தியிருந்தனர்.

தமது முகாம்மீது விடுதலைப்புலிகள் எந்த நேரத்திலும் தாக்குதல் நடாத்தலாம் என்ற பயம் புளொட்டினரிடம் இருந்தது. எனவே, தான் இம்முகாமைத் தாக்க வரும் விடுதலைப் புலிகளை வெகு தொலைவிலேயே எதிர்கொண்டு சண்டையை ஆரம்பிப்பதன்மூலம் முள்ளிக்குளம் முகாமை (பிரதானமுகாமை) நாம் நெருங்குவதைத் தடைசெய்ய முடியும் என்ற எண்ணத்துடன் அவ்விதம் ஆட்களைத் தொலைவில் நிறுத்தியிருந்தனர்.

அவ்விதம் முள்ளிக்குளம் முகாம் பாதுகாக்கப்படுகிறது என்பதை எமது வேவு நடவடிக்கை மூலம் அறிந்து கொண்டோம்.

இம் முகாமின் ஆட்தொகை சுமார் 100ஆக இருக்கலாம் என்றும், அதில் 25-30 பேர் வரை முகாமுக்கு வெளியே பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும், மிகுதி 75 பேர் வரை முகாமில் இருக்கலாம் என்றும் கணித்துக் கொண்டோம்.

## முகாம் தாக்குதல்

20 - 05 - 89 அன்று அதிகாலை, முள்ளிக்குளம் முகாம் தாக்கப்பட்டு முற்றாக அழிக்கப்பட வேண்டும் என்ற முடிவுடன் எமது தாக்குதற்படை முதல்நாள் நள்ளிரவே முள்ளிக்குளம் கிராமத்தை நோக்கி முன்னேறியது.

காடுகளுக்கூடாக முன்னேறிய எமது படை அணி, முள்ளிக்குளம் முகாம் அமைந்

(10ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

www.eelamview.com



## முள்ளிக்குளம்.,....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த பிரதேசத்துக்குள் நுழைகிறது.

அதிகாலை 4 மணி இருக்கும்.

கிராமம் உறங்கிக் கொண்டிருந்தது.

முகாமை நோக்கி நாம் அவதானமாக முன்னேறுகையில் எமது பாதைக்கு அருகில் ''ரோச் லைற்'' வெளிச்சம் தெரிகிறது.

அது முகாமைப் பாதுகாக்க என நிறுத்தப்பட்ட ஒரு சிறு குழுவாக (கட் அவுட்) இருக்கலாம் என ஊகித்தோம். எனவே, அந்த வெளிச்சத்துக்குரியவர்களுக்கு எதுவித சந்தேகமும் ஏற்படாத விதத்தில் வெளிச்சம் வந்த திசையைவிட்டு, உள்நோக்கி - முள்ளிக்குளம் முகாமை நோக்கி - முன்னேறினோம்.

சரியாக அதிகாலை 5-00 மணிக்குத் தாக்குதலைத் துவங்கவேண்டும் என்பதே எமது திட்டம். ஆனால், எமது பிரயாணத்தில் ஏற்பட்ட கணக்கம் காரணமாக 5-00 மணிக்கு முகாமை நாம் நெருங்கவேயில்லை.

இப்பொழுது, முகாமிலிருந்து சுமார் 500 யார் தொலைவுக்கு வந்து விட்டோம். அங்கே இருந்தபடி எமது தாக்குதற்படையானது பல குழுக்களாகப் பிரிகின்றது. அவை முகாமின் 4 திசைகளுக்கும் சென்று மெது மெதுவாக முகாமை நோக்கி முன்னேறுகின்றன.

இப்பொழுது நேரம் 5-30 இருக்கும்.

புலிகளின் படைப்பிரிவுகள் புளொட் கொலைஞர்களின் முள்ளிக்குளம் முகாமைச் சூழ்ந்து கொள்கின்றன.

மெதுவாக விடிந்து விட்டது.

புளொட் முகாமின் காவல் அரணில் இருக்கும் ஆளுக்கு, அவர் நூறு யாருக்குள் இருக்கும் பொருளை அடையாளம் காணுமளவுக்கு விடிந்து விட்டது.

எனவே, சிறு பற்றைகளின் மறைவில், மெதுவாகவும் அவதானமாகவும் எமது தோழர்கள் முன்னேறினர்.

இருந்த போதிலும், எமது படைப்பிரிவினரைக் கண்டு கொண்ட முகாமின் காவலன் ஒருவன், எமது தோழர்களை நோக்கிச் சுடுகிறான்.

எதிரிக்கு மிக அருகில் சென்ற பின்பே நாம் தாக்குதலை ஆரம்பிக்க வேண்டும் என்ற எமது திட்டம் செயல்படும் தன்மையை இழந்தது. தாக்குதலை நாம் துவக்குவதற்குப் பதிலாக, எதிரி எம்மீது தாக்குதலை ஆரம்பித்தான்.

அப்போது, நேரம் சரியாக 5-32 மணி.

முகாமை நன்றாக நெருங்கி முகாமைச் சூழ்ந்து கொண்ட பின், முகாம் மீது அதிரடித் தாக்குதலை நடாத்தி, முகாமினுள் புகுந்து முகாமை எமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல் என்ற எமது திட்டம் - செயல்படமுடியாத ஒரு சூழ் நிலைக்கு வருகிறது.

முகாமிலிருந்து சுமார் 100 யாருக்கும் சற்று அதிகமான தூரத்தில் எமது குழுக்கள் நகர்ந்து கொண்டு இருக்கும் போதே சண்டை துவங்குகின்றது. முகாமிலிருந்த புளொட்டினர் ஓடிச் சென்று சுடும் - தாக்குதல் அரண்களில் பதுங்கி, தாக்குதலை நடாத்துகின்றனர்.



பலமான நிலையில் இருந்த மேற்குப் பகுதி அரண்

இந்நிலையில், எம்மைத் தற்காத்தபடி பாதுகாப்பு நிலைகளில் ஆறுதலாக ஊர்ந்து சென்று தாக்கும் மரபுவழிப்போரை மீறிய வகையில் வேகமான நகர்வின் மூலம் முகாமை நெருங்கி நின்று தாக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

இதனால், எம்மைத் தற்காத்தபடி முகாமுக்குள் நுழைவது என்பது சாத்தியமற்றுவிடுகின்றது.

எனவே, முகாமை நோக்கி விரைவாக முன்னேறும்படி சகல குழுக்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது.

புலிகளுக்கே உரித்தான ஆச்சரியமூட்டும் வேகம்... மூர்க்கத்தனமான தாக்குதல்...... துப்பாக்கிகள், ரவைகளை முகாமை நோக்கிக் கக்குகின்றன... தாக்குதலில் புதிய வேகம் பிறக்கிறது... புலிகள் முகாமை நெருங்குகின்றனர்.

முகாமிலிருந்து வரும் எதிரியின் துப்பாக்கி ரவைகள் காற்றைக் கிழித்துச் செல்கின்றன. எதிரிகள் முகாமின் வெளிப்புறத்தை நோக்கி ஏவுகுண்டு (செல்) தாக்குதலைப் பலமாக மேற்கொண்டனர்.

அந்த நிலையிலும் எமது தாக்குதல் குழுக்கள் வேகமாக முன்னேறுகின்றன.

தென் பகுதியின் வயல் வெளிகளுக் கூடாக முன்னேறிக் கொண்டிருந்த எமது குழு, எதுவித தற்காப்பு அரணும் இன்றி மோதியபோது, அக் குழுவில் இருந்த எமது இரண்டு தோழர்கள் (மாக்ஸ், கர்ணன்) வீரமரணம் அடைகின்றனர். மேலும் இரண்டு தோழர்கள் காயமுறுகின்றனர். தொடர்ந்து அக் குழு தாக்கிக் கொண்டிருக்கிறது. (இக்குழுமீது தான் எதிரி முதலில் தாக்குதலை மேற்கொண்டான்.)

இந்நிலையில், எதிரியின் அரணில் இருந்து, நடாத்தப்பட்டுக் கொண்டிருந்த 30 கலிபர் இயந்திரத்துப்பாக்கியின் கடுந்தாக்குதலில் இருந்து பாதுகாப்பு எடுக்கும்படி குழுத் தலைவன், அக் குழுவுக்குக் கட்டளை கொடுக்கிறான். உடனடியாக எமது வீரர்கள் வயல் வரம்புகளின் பின் படுத்து நிலை எடுக்கின்றனர். இதனால் தென்பகுதியில் எமது முன்னேற்றம் தடைப்படுகின்றது.

இதேசமயம், மேற்குத்திசையாக உள்ள தரவைப்பகுதியை நோக்கி 30 கலிபர் ஒன்று ரவைகளைப் பொழிந்து கொண்டிருந்தது. ஆனால், அங்கு எமது குழுக்கள் இருக்கவில்லை.

முகாமை நோக்கி மூன்று பக்கத்திலிருந்தே எம்மால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மேற்குத் திசையை வெற்றிடமாகவே வைத்திருந்தோம்.

இப்பொழுது, மேற்குத் திசையில் தாக்கிக்கொண்டிருந்த எதிரியின் 30 கலிபர், பற்றைகளையும், மரங்களையும் துளைபோட்டுக் கொண்டிருந்தது. எதிரியின் பெரிய பலம் ஒன்றுவீணடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இதனை எதிரி தெரிந்திருக்கவில்லை.

இதேசமயம், முகாமின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கூடாக முள்ளிக்குள அணைக்கட்டின் ஒரு கரையூடாக முகாமை நோக்கி முன்னேறிய எமது ஒரு குழு, எதிரியின் கடுமையான தாக்குதலுக்கு மத்தியிலும், இலாவகமாகவும், வேகமாகவும்மோதி, முன்னேறி, அந்தப் பக்கத்தில் இருந்த பாதுகாப்பு அரண் ஒன்றைக் கைப்பற்றினர். அரணைக்கைப்பற்ற நடந்த சண்டையில் 2வது லெப். சுரேஸ், விமல், பீற்றர், வீரமரணம் அடைந்தனர்.

இப்பொழுது நேரம் 5.50 மணி. நன்றாக விடிந்துவிட்டது. ஒவ்வொன்றும் தெளிவாகத் தெரிந்தது.

எதிரியின் முகாமுக்கு உள்ளேயே ஒரு பாதுகாப்பு அரணை நாம் கைப்பற்றி விட்டோம். ஏனைய திசைகளில் இருந்து எமது குழுக்களை நெருங்கவிடாது, எதிரி தாக்கிக் கொண்டிருந்தான்.

இதே நேரம், முகாமின் வட பகுதியில் இருந்த எமது குழு ஒன்று, தமக்கு நேரே இருந்த எதிரியின் காவலரண் ஒன்றைக் கைப்பற்றுவதற்காகக் கடுமையாக முயன்று கொண்டிருந்தது.

50யார்இடத்தைக்கொண்ட அந்த வெளியில், எமது குழு தற்காப்புடன் முன்னேறிச் செல்ல எந்தவிதமான பாதுகாப்பு நிலைகளும் இல்லாததை உணர்ந்த எமது தோழர்கள் ஒரு முடிவை எடுக்கின்றனர்.

அதாவது, இருவர் ஊர்ந்து சென்றுகடப்பதன்மூலம் எதிரியின் பிடரியைப் பிடிப்பது என்றும், அதற்கு உதவியாக அக் குழுவைச் சேர்ந்த மற்றைய தோழர்கள் தொடர்ந்து எதிரியின் நிலையைநோக்கித் தாக்குவதன் மூலம் பாதுகாப்பு அரண்களுக்குள் இருக்கும் எதிரிகளின் கவனத்தைத் தம்மீது திரும்பச்செய்து அவ்விரண்டு தோழர்களையும் பாதுகாப்பாக எதிரி நிலைக்குள்ளே அனுப்புவது என்றும் முடிவெடுத்து, அம்முடிவைச் செயற்படுத்துகின்றனர்.

கப். சபேசன், 2வது லெப். சிவம் ஆகிய இருவரும் எதிரியின் அரணைநோக்கித் துப்பாக்கிகளுடன் ஊர்ந்து முன்னேறினர்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக எதிரியின் அரண்களை எட்டிப்பிடிக்கும் சமயத்திலேயேஅவ்விருவரும் ஒருவர் பின்ஒருவராய் எதிரியின் குண்டுகளுக்கு இரையாகின்றனர், இவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டிருந்த குழுவில்இருந்த நாயுடுவும்

இப்பொழுது வடக்குப்பகுதியிலிருந்து முன்னேறிய எமது குழுவும் இழப்புகளைச் சந்தித்தநிலையில் மேலும் முன்னேறுவதை இடைநிறுத்தி, பாதுகாப்பாக நிலை எடுத்துக் கொள்கின்றது.

இப்பொழுது நேரம் 6-30 இருக்கும்.

இதேசமயம் கிழக்குப் பகுதியிலிருந்து முன்னேறிய எமது குழுவானது, முள்ளிக்குள அணைக்கட்டில் நிலை எடுத்தவாறு எதிரியுடன் சண்டையிட்டுக்கொண்டிருந்தது. இக்குழுவானது தனக்குநேரே இருந்த எதிரியின் பாதுகாப்பரணிலிருந்து சுமார் 15யாருக்குள் நின்று போரிட்டுக்கொண்டிருந்தது. இவர்கள் நின்ற பக்கமிருந்து கண்ணிவெடிகள் எதிரிகளினால் வெடிக்க வைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இதனால் எதிரி நிலைகளை நோக்கி எமது தோழர்கள் முன்னேறுவது கடினமாக இருந்தது.

அணைக்கட்டை நோக்கி வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகளைச் செயலிழக்கச் செய்வதன் மூலமே எதிரியின் அப்பாதுகாப்பரணை நாம் வெற்றி கொள்ளமுடியும் என்ற முடிவுக்கு அக்குழுவினர் வருகின்றனர்.

எனவே, கண்ணிவெடிகளுக்கு மின்சாரத்தை வழங்கும் மின்வயர்களைத் துண்டிப்பதன் மூலம்கண்ணிகளைச் செயலிழக்கச் செய்யத் தீர்மானித்தனர்.

இதை நிறைவேற்றுவதற்காக, கப். குலமும், கப். புதுமையும் அக்கண்ணிவெடி வயலுக்குள் (Mine field) பாய்ந்துசென்று வயர்களைக் கத்தரிக்கத் தொடங்கினார்கள். அவ்விருவருக்கும் உதவியாக அக்குழுவைச் சேர்ந்த மற்றைய தோழர்களின் துப்பாக்கிகள் முழங்கின.

ஆனால், கண்ணிகளைச் செயலிழக்கவைக்கச் சென்ற குலம் இன்னொரு கண்ணி வெடித்ததில் உயிரிழக்க, துப்பாக்கிக் குண்டுபட்டுப் புதுமையும் இறக்கின்றான். அத்துடன் எதிரிநிலையிலிருந்து அணைக்கட்டை நோக்கித் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தவண்ணமிருந்தன.

இப்பொழுது கிழக்குப்பகுதியிலிருந்து எதிரிகளின் நிலைகளை நோக்கிய எமது முன்னேற்றம், தற்காலிகமாகத் தடைப்படுகின்றது.

எதிரியிடமிருந்து ஆரம்பத்திலேயே கைப்பற்றப்பட்ட அவனது காவலரணின் பாதுகாப்பை எமது தோழர்கள் ஸ்திரப்படுத்திக் கொண்டனர். அருகிலிருந்த மற்றைய குழுக்களைச்சேர்ந்த தோழர்களில் சிலரை அழைத்து, கைப்பற்றப்பட்ட பாதுகாப்பரணை எமது தோழர்கள் பலப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

இத்தாக்குதலைத் திட்டமிட்டு அதற்கு நேரடியாகவே தலைமைதாங்கி நடாத்திக் கொண்டிருந்த புலிவீரன், முகாம்தாக்குதலின் ஆரம்பத்திலேயே காயமடைகின்றான்.

எனவே,தொடர்ந்தும் தாக்குதலை மேற்கொள்வதற்காக சகதோழனாகிய ஒரு குழுநிலைத் தலைவனை அழைத்து முகாம் தாக்குதலுக்கான பொறுப்பை ஒப்படைக்கின்றான்.

இந்தநிலையில் தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சகலகுழுக்களுடனும் வாக்கி டோக்கி மூலம் தொடர்பு கொண்டு இனிஎவ்விதம் எதிரி நிலைகளை நோக்கி முன்னேறுவது என்று விளக்கிக் கூறிக் கட்டளை பிறப்பித்தான்.

அதன்பிரகாரம் குழுக்கள் மீண்டும் ஒழுங்கமைக்கப்பட்டு புதிய தந்திரோபாயத்துடனும், புதிய வேகத்துடனும் முகாமை நோக்கித் தாக்குதலைத் தொடுக்கத் தீர்மானிக்கப்பட்டன.

தென்பகுதி வயல்வெளிகளில் சிக்குப்பட்டு சிறியவயல் வரம்புகளைத் தமது பாதுகாப்பரணாகப் பயன்படுத்திப் போரிட்டுக் கொண்டிருந்த எமது குழுவானது இப்பொழுதும் அந்த இடத்திலேயே நிலை எடுத்துக்கிடந்தது. அது பின்னோக்கிச் செல்லவும் முடியாது, முன்னேறவும் வழியின்றி இருந்தது.

வெற்றிடமாக விடப்பட்டிருந்த மேற்குப் பகுதியை நிரப்புவதற்காகச் சிலதோழர்கள் அனுப்பப்பட்டனர்.

இப்பொழுது நேரம் சுமார் 8-15 இருக்கும்.

எமது குழுக்கள் மீள் ஒழுங்கமைக்கப்பட்டுக்கொண்டிருந்தபடியால் எமது தரப்பிலிருந்து சுமார் 1/2 மணி நேரம்வரை துப்பாக்கிவேட்டுக்கள் தீர்க்கப்படுவது மிகவும் குறைந்து காணப்பட்டது.

அத்துடன் புதிய தாக்குதலுக்காக, புதிய இடங்களை நோக்கி ஓடியும், நடந்தும் சென்ற எமது தோழர்களைக் கண்ட எதிரிகள் எமது தோழர்கள் பின்வாங்குகின்றார்கள் எனநினைத்து தமது பாதுகாப்பு அரண்களுக்குள் இருந்தபடி வெற்றிக்கோசம் இட்டார்கள். எம்மைச் சவாலுக்கு அழைத்தார்கள். நிலமையைப் புரிந்து கொள்ளாது வெற்றி தம்பக்கமென நினைத்துக் கூக்குரல் இட்டபடி இருந்தனர்.

இந்த வேளையில்தான் எமது குழுவினரின் புதிய நகர்வு புதிய வேகத்துடன் ஆரம்பமாகிறது.

இனி, பலத்துடன் இருந்த அம்முகாமின் மேற்குப்பகுதிக் காவல் அரண்களைப் பற்றி சிறிது பார்ப்போம்.

இப்பகுதியானது மூன்று பெரிய புளிய மரங்களைக் கொண்டிருந்தது. அப்புளிய மரங்களுக்குக் கீழே மூன்று அல்லது நான்கு அடி உயரத்திற்கு மண் அணைக்கப்பட்டு ரொக்கட் (ஏவுகுண்டு) தாக்குதலிலிருந்து பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு பலமான அரண்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இவ் அரண்களில் சக்தி வாய்ந்த இயந்திரத்துப்பாக்கி வகையைச் சேர்ந்த 30 கலிபர்கள் பொருத்தப்பட்டுக்கிடந்தன. ஒன்று தெற்கு நோக்கியும் மற்றையது மேற்கு நோக்கியும் குண்டுகளைப் பாய்ச்சியபடி இருந்தது.

இதே சமயம் சுமார் 20க்கும் மேற்பட்ட துப்பாக்கிகளும் அவ்வரணிற்குள் இருந்து எமது தோழர்களை நோக்கி வெடித்தபடி இருந்தன.

நான்கு புறமும் மூடப்பட்ட இவ்வரண்களுக்குள் இருந்து வெளியில் இருக்கும் எமது தோழர்களை நோக்கி இலக்கு வைத்து தாக்குதல் புரிவதென்பது எதிரிக்குச்சுலபமான விடயம்.

ஆனால், வெளியில் இருந்த எமது தோழர்களால் சிறிய, சிறிய, துவாரங்களுக்கூடாக மங்கலாகத்தெரியும் எதிரியின் உடலை நோக்கி குறிவைத்து தாக்குவதென்பது மிகவும் சிரமமான விடயம்.

இந்த நிலையில் சண்டை எதிரிக்கே சார்பானதாக இருந்தது. ஆனாலும் எவ்வளவு இழப்புக்களைச் சந்தித்தாலும் புளொட்டின் அம்முகாம் முற்றுமுழுதாக நிர்மூலம் செய்

(12ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

www.eelamview.com






## 88-ம் ஆண்டின் நடுப்பகுதி

வன்னிக்காடுகளில் எமது தலைவர் பிரபாகரனைத் தேடி இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் சல்லடை போட்டுக்கொண்டிருந்த காலம்......

காடுகளில் புகுந்து தேடுதல் வேட்டை நடத்தியபோதெல்லாம், பாரிய உயிரிழப்புக்களைச் சந்தித்த ஆக்கிரமிப்புப் படையினர் பின்னர் தமது முகாம்களில் இருந்தவாறு காட்டுப்பகுதிகளை நோக்கித் தொடர்ச்சியான எறிகணைத் (ஷெல்) தாக்குதல்களை மேற்கொண்டிருக்கின்றனர்......

எங்களுடைய முகாம் அமைந்திருந்த அலம்பில் காட்டுப் பகுதியை நோக்கித் தினமும் இடைவிடாமல் ஷெல் குண்டுகள் பாய்ந்து கொண்டிருந்தன. எனவே அந்தப் பகுதியை விட்டு அதற்குச் சமீபமான வேறொரு பகுதியில் எமது முகாமை மாற்றுவதற்காக எம்மில் குறிப்பிட்ட சிலர் மட்டும் அந்த இடத்துக்குப் போய்த் தற்காலிக முகாம் ஒன்று அமைத்து - நிரந்தர முகாம் அமைக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தோம்.

அந்த இடத்திலிருந்து சிறிது தூரத்துக்கு அப்பால் அருவி ஒன்று... அருவியின் மேற்குப் புறமாய்ப் பெரியவெளி ஒன்று. இப்படிப்பட்ட வெளியை 'வெட்டை, என்றும் சொல்லுவதுண்டு.

அது புதிதாக அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த காட்டு முகாம், என்பதால் அப்போது தான் அங்கே கிணறு ஒன்று தோண்டும் வேலை செய்து கொண்டிருந்தோம். அதனால் எமக்குத் தேவையான தண்ணீரை, சுமார் ஒரு மைல் தொலைவில் - வாய்க்காலின் நடுவே வெட்டப்பட்ட ஐந்து அடி ஆழமான கிணற்றிலிருந்தே எடுத்துவருவோம். பெரும்பாலும் ஆனந்தி அக்கா பாதுகாப்புக் கொடுத்து முன்னே செல்ல, எங்கள் பட்டாளம் தண்ணீரை நிரப்பும் பாத்திரங்களுடன் (Barrel) பின்னே செல்லும். ஒருவர் தோளையும் மற்றவர் தோளையும் பலமாய்த் தடி ஒன்று இணைக்க - தடியின் நடுவில் நீர் நிறைந்த பாத்திரங்களைத் கட்டித் தொங்க விட்டு இருவர், இருவராய் சுமந்து வருவோம்.

ஆனந்தி அக்கா... மன்னார் தந்த மறப்பெண்.

எம் இதயங்களில் தனக்கென்று ஒரு தனியிடத்தைப் பதிவு செய்து கொண்ட இனிய தோழி.

எப்போது நினைத்தாலும், அந்த நெடிய, உயரத்துக்கேற்ற பருமனுடன் உறுதியான உடல் வாகும் கொண்ட அவளுடைய உருவம் எம்முன் நின்று எம்மைப் பார்த்துச் சிரிப்பது போலிருக்கும்......

R.P.G. போன்ற கடினமான ஆயுதங்களைக் கூட லாவகமாய் இயக்குவதில் ஆனந்தி அக்கா கைதேர்ந்தவள். தனது மனவுணர்ச்சிகளை இலேசில் வெளிப்படுத்தாத அந்த வீராங்கனையின் அடிமனதில், எல்லோரிடத்திலும் ஒருவித ஆழமான பாசம் ஊற்றெடுத்துக் கொண்டிருந்ததை அவளுடைய செய்கைகள் எப்பொழுதும் எமக்கு உணர்த்தும்.

பாரமான மூடைகளையோ. பொருட்களையோ தூக்க வேண்டுமென்றால், உடனே எல்லோருடைய வாயிலும் ஆனந்தி அக்கா தான்...

''ஆனந்தி அக்கா, இதை ஒருக்காத் தூக்குங்கோ..''

''ஆனந்தி அக்கா, இதை ஒருக்காப் பிடிச்சு என்ரை தலையிலை வைச்சு விடுங்கோ...''

எல்லோருக்கும் சளைக்காமல் கை கொடுப்பாள்.

தன்னுடைய தலையில் மூட்டை ஒன்றைச் சுமந்து கொண்டே மறு கையால் இன்னொருவரின் மூட்டைக்குக் கை கொடுக்கும் அவளுடைய உடல் உறுதியை எப்போது நினைத்தாலும் வியப்பே மிஞ்சும்....



2 வது லெப். ஆனந்தி
(காமாட்சியம்மாள்)
பரப்புக்கடந்தான்

உடல் மட்டுமல்ல, அவள் உள்ளமும் உறுதியின் உறைவிடம் தான்.

85-ம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்காகத் தன்னை அர்ப்பணிக்கவென இவள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்ட போது, ஆனந்தி அக்காவின் பெற்றோர் கடுமையாக எதிர்த்தார்கள்.

''வீட்டை விட்டு நீ எப்ப வெளிக்கிட்டாயோ அண்டைக்கே நீ எங்கடை பிள்ளையில்லை எனச் சொல்லி விட்டனர்.

இவளுடைய உறுதி தளரவில்லை.

துணிவுடன் தனது பாதையைத் தேர்ந்தெடுத்தாள்.

எப்போதாவது ஆனந்தி அக்காவிடம் அவள் வீட்டைப் பற்றி- பெற்றோரைப் பற்றி- யாராவது கேட்க நேர்ந்தால் பதில் எதுவும் கூறாமல் மௌனமாகி விடுவாள். தமது பெற்றோரின் நிலைப்பாடு பற்றி அவளுடைய அடிமனதில் தாக்கம் ஒன்று இருந்ததற்கு இந்த மௌனம் சாட்சி கூறும்.

மேலே இதுபற்றி எதுவும் கதையாமல் நாங்கள் பேச்சின் திசையை மாற்றுவோம்.

இந்தத் தற்காலிக முகாமில் எம்முடன் இருந்தவர்களில் மற்றுமொருத்தி ராதை.

நீர்வேலி மண்ணில் பிறந்து, வளர்ந்து தமிழீழ மண்ணுக்காய்த் தனது உயிரையும் உடலையும் அர்ப்பணித்தவள்.

சின்ன உருவம்... மென்மையான சுபாவம்.

எதிலும் அவசரப்படாமல் பொறுமையுடன், எந்த வேலையானாலும் அதை முழுமையாகச் செய்து முடிப்பதில் கெட்டிக்காரி.

உலகப் போராட்ட வரலாறுகளைக் கூறும் பல புத்தகங்கள் ஆங்கில மொழியிலேயே எழுதப்பட்டிருப்பதால் அவற்றை விளங்கிக்கொள்வதற்குரிய ஆங்கில அறிவை எம்மில் வளர்த்துக்கொள்ளவேண்டுமென்ற ஆவல் எமக்கு எப்போதும் உண்டு. ராதைக்கு எம்மிலும்பார்க்க ஆங்கிலத்தில் ஓரளவு தேர்ச்சியுண்டு. எனவே அவளுடன் வேலை செய்யும் நேரங்களில் எல்லாம் ஆங்கிலச் சொற்களுக்கு அவளிடமிருந்து அர்த்தம்தெரிந்து கொள்வோம். கிணறு தோண்டும் வேலையைச் செய்த போதே பல ஆங்கிலச் சொற்களுக்கு அவளிடமிருந்து அர்த்தம்தெரிந்துகொண்டோம்இதனால் வேலையின் பளுவும் எமக்குத் தெரியவில்லை... அந்த நேரங்கள் அறிவை வளர்க்கவும் உதவின...

எமது கானக வாழ்க்கையில் மறக்கமுடியாத நாட்கள் அவை.

திடீரென்று ஒருநாள் எமது முகாமுக்குச் சிறிது தொலைவில் இருந்த வெளிப்பகுதிக்கு மேல் இந்திய ராணுவ உலங்கு வானூர்தி ஒன்று தரையிறங்கும் நோக்கத்துடன் தாளப் பதிந்து வானில் சுற்றிச்சுற்றி நோட்டம்விடத் தொடங்கியது. நாங்கள் அனைவரும் உடனே நிலை எடுத்துக்கொண்டோம். கப்டன் சதீஷ் அண்ணா தலைமையில் ஹெலிமீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆனந்தி அக்காவின் ஜீ. 3 யிலிருந்து புறப்பட்ட ரவை ஹெலியிலிருந்த உயரதிகாரி ஒருவனுடைய கதையை முடித்தது....

இந்திய இராணுவம் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தரையிறங்கினால் மேலும் ஆபத்து என்பதை உணர்ந்து அவ்விடம்விட்டுப்பறந்துசென்றது...

அப்பகுதியில் எமது முகாம் ஒன்று இருப்பதை அந்தச் சம[illegible] கொண்ட இந்திய இராணுவம் அன்றுமுதல் எமது முகாமைக் குறிவைத்து எறிகணைத் தாக்குதலை ஆரம்பித்தது.

சொல்லிவைத்தாற் போல- தினமும் அதிகாலை ஐந்து மணிக்கு எமது முகாமை நோக்கி. இந்திய இராணுவம் ஏவிய எறிகணைகள்' ஊய்' என்று சத்தம் எழுப்பியவண்ணம் தொடர்ச்சியாக வந்து விழுந்துகொண்டேயிருக்கும். சில நாட்களில் தொடர்ந்து ஒரு மணிநேரம்-சில வேளைகளில் இரு மணிநேரம் எறிகணைத் தாக்குதல் நடக்கும்.

எனவே நாங்கள் தினமும் அதிகாலை நான்கு மணிக்கே எம்மால்அமைக்கப்பட்டபாதுகாப்பான பதுங்கு குழியைத் தஞ்சம் அடைவதை வழக்கமாக்கிக்கொண்டோம்.

இதன் காரணமாக எமது காலை உணவு (ரொட்டி) தயாரிப்பு வழமையான நேர அட்டவணைக்குள் அடங்காதுபோய்விடும் .தொடர்ச்சியான நிகழ்ச்சியாக இது இருந்தபடியால் சில நாட்களின்பின் எமது காலை உணவான ரொட்டியை,முதல் நாள் இரவே செய்து ஒவ்வொருவருடைய பங்கையும் அவரவர் சட்டைப் பைகளில் வைத்துக் கொள்ளுவோம்.

காலைவேளையின் 'பூபாள' மாகத் தினமும் எறிகணைகள் பயங்கரச் சத்தத்துடன் எமது முகாமைச் சுற்றிவர விழுந்துவெடிக்கும்...

எங்கள் சட்டைப் பைகளில் பதுங்கியிருக்கும் ரொட்டிகள், பதுங்கு குழியில் இருந்தபடியே காலியாகும்...

தாக்குதல் ஓய்ந்துவிட்டது- ஊர்ஜிதமானவுடன் முகாம் அமைக்கும் வேலைகளில் மும்முரமாய் ஈடுபடுவோம்.

அன்று...

ஆடி மாதம் 3-ந் தேதி.

வழமைக்கு விரோதமாய் அன்றைய காலைப்பொழுது அமைதியாய் மலர்ந்தது. தினசரி குண்டுச் சத்தங்களுடன் விடியும் அன்று பறவைகளின் பொழுது,'கீச்' ஒலியால் புது மெருகு பெற்றது. மந்திகள் கிளைக்குக் கிளை தாவி, கிளைகளை உலுப்பித் தமது குதூகலத்தை வெளியிட்டன ஆனால் அன்று அதிகாலை ஐந்து மணிக்கு எறிகணை வந்து விழவில்லை



ராதை
(விக்கினேஸ்வரி)
நீர்வேலி

அது ஒரு வித்தியாசமான அமைதி. அந்த அமைதிக்குப் பின்னர் ஏதோ விபரீதம் இருப்பதாக அடிக்கடி உள்மனம் எச்சரித்துக்கொண்டேயிருந்தது... ஏதோ ஒருவித சோகம் மனதை ஆக்கிரமிக்க- வேண்டாதசிந்தனைகளைஉதறித் தள்ளிவிட்டுக் கடமைக்காக கால்கள் விரைகின்றன...

தண்ணீர் எடுத்துவரப் புறப்படுகிறோம்.

அனந்தி அக்கா ஜீ. 3உடன் முன்னே நடக்க - நாங்கள் பின்னால்...

நெடிதுயர்ந்த மரங்களினூடாக-காட்டின் அடர்த்தியையும் ஊடறுத்து, வளைந்தும், நெளிந்தும்- ஏறியும் இறங்கியும் - அகன்றும் ஒடுங்கியும் கிடந்த அந்த ஒற்றை அடிப் பாதை வழியே தண்ணீர் சுமந்து முகாமை வந்தடைந்தோம்.

ஒன்றிரண்டு காவல் அரண்களை மேலதிகமாகப் போடத் தீர்மானித்ததனால், நானும் வேறு சிலரும் குழிகள் வெட்டும் வேலையில் நிற்கிறோம்.

அன்றைய சமையல் முறை ராதையினுடையது.

ராதையின் சமையல் என்றால் எங்களுக்கெல்லாம் ஒரே கொண்டாட்டம்...

ருசியான சமையலுடன்- சமைத்த பாத்திரங்கள், அந்த இடம்-யாவையும்சுத்தமாக்கி, ஒவ்வொரு பொருளையும் அதனதன் இடத்தில் வைத்து: மிகவும் நேர்த்தியாக ராதை செய்து முடிப்பாள்... பார்க்கும்பொழுதே சாப்பிட வேண்டும்போல இருக்கும்.

அது ராதைக்கே உரிய தனிக் கலை.

வேடிக்கையாய்ப் பேசி, மகிழ்ந்து அன்றைய மதிய உணவை அனைவரும் ரசித்துச் சாப்பிட்டோம்.

அடுத்த கணமே எமக்கு மரணம் நேரலாம் என்பதைத் தெரிந்துகொண்டும் - அந்தக் கணப்பொழுதை மகிழ்ச்சியாகக் கழிப்பதற்கு நாம் பழகிக் கொண்டவர்கள்... அதனால் தான் கானக வாழ்க்கையின் கடினங்களையும் அருமைத் தோழர்களின் உயிரிழப்புக்களையும் சகித்துக்கொண்டு எமது உன்னதமான-லட்சியத்துக்கானபோராட்டத்தைஉறுதியோடு தொடர்ந்துகொண்டிருப்பது எமக்குச்சாத்தியமாகிறது.

அன்றிரவு ஒன்பது மணி வரை முகாம் காவல் வேலை ஆனந்தி அக்காவுக்கும் ராதைக்கும் உரியது. அதன் பின் இருவரும் வந்து படுத்துக்கொள்கிறார்கள்.

'கொமாண்டோ ரென்ற்'- (Commando Tent) என்று சொல்லப்படுகின்ற ஏழுபேர் மட்டும் படுத்திருக்கக்கூடிய சிறிய கூடாரத்தில் எனது வலது பக்கம் ஒரு தோழி- இடது பக்கம் ராதை- இன்னும் இருவர் படுத்திருக்கிறோம் - கூடாரத்துக்கு வெளியே ஆனந்தி அக்காவும் இன்னொரு தோழியும்.

அனைவரும் நித்திரையில் ஆழ்ந்துவிட்ட நேரம்...

இரவு 10 மணி இருக்கும். செவிப்பறையை உடைக்கும் பாரிய வெடிச் சத்தம் ஒன்று நித்திரையைக் கலைக்கிறது. திடுக்குற்று கண் விழிக்கிறோம்...

''ஐயோ... ஐயோ... இங்கை வாங்கோ'' என்ற ஆனந்தி அக்காவின் கூக்குரல், காட்டு மரங்களில் எதிரொலித்துச் சிதறுகிறது.

சுற்றிலும் கருமை படர்ந்த இருள்...

எதுவுமே கண்ணுக்குப் புலப்படவில்லை ஆனாலும், எமது முகாமுக்குள்ளேயே எறிகணை (ஷெல்) ஒன்று விழுந்து வெடித்துவிட்டது என்பதை மட்டும் உணரக் கூடியதாக இருந்தது

''அக்கா டோர்ச் எங்கை?..- - ஒரு குரல்.

''இங்கை தான், என்ரை தலைமாட்டிலை இருக்கு... என்னாலை எழும்பி எடுக்க ஏலாமை இருக்கு...'' காயமடைந்த தோழி ஒருத்தி முனகுகிறா.

இதற்கிடையில் - ஷெல் அடிக்கிறாங்கள்... பதுங்கு குழிக்குள் ஓடுங்கோ.'' என்று பாதுகாப்பரணிலிருந்து ஒரு தோழிகத்துகிறாள்.

'ஒரு எறிகணை விழுந்து எங்கள் கூடாரத்துக்கு மிக அருகில் வெடித்திருக்கிறது...''

என் ஆடை முழுவதும் ஈரமாய் - பிசுபிசுவென ஒட்டுகிறது...இரத்தம்!

(13ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

www.eelamview.com



## முள்ளிக்குளம்.....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

யப்படுவதே எமது உரிய நோக்கமாக இருந்தது.

இத்தாக்குதலை நாம் வெற்றிகரமாக முடிக்காதுவிடின் அங்கிருக்கும் புளொட் கொலைஞர்கள் தப்பிச் செல்வதுடன் இவர்கள் தமிழீழ மக்களுக்கும், எமது விடுதலைப் போராட்டத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக இருப்பார்கள் என்பதை எமது தோழர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

எனவே என்ன விலை கொடுத்தாகினும், எத்தகைய இழப்புக்கள் வரினும் இறுதி வெற்றிவரை தாக்குதலில் ஈடுபடுவது என்ற முடிவுடன் புதியவேகத்துடன் தாக்குதல் தொடங்கப்பட்டது.

இப்பொழுது தாக்குதலுக்குத் தலைமை ஏற்ற புலிவீரன் தன்னுடன் இரண்டு போராளிகளை அழைத்துக் கொண்டு, ஏற்கனவே தென் பகுதி வயல்வெளிகளுக்குள் சிக்கிக் கிடந்த குழுவினரை நோக்கி பின்புறமாகச் சென்றான்.

அக்குழுவினரை, அவர்கள் நிலைஎடுத்துக்கிடந்த வயல் வரப்புக்களிலேயே இருந்தபடி எதிரியின் நிலையை நோக்கித் தாக்குதலைவேகப்படுத்தும்படி கட்டளையிட்டுவிட்டு, தாக்குதற் தலைவன் உட்பட மொத்தம் மூன்று விடுதலைப் புலிகளும் முகாமை நோக்கி ஊர்ந்து செல்லத் தொடங்கினர்.

தலையை மேலே தூக்கியபடி ஊர்ந்து செல்லக் கூடிய அளவுக்கு அந்த வயல் வரம்புகள் பெரிதாக இருக்கவில்லை. ஓர் அடியைவிட உயரம் குறைவான அந்த வரப்புகளின் துணையுடன் எதிரி நிலையை நோக்கி ஊர்ந்து செல்வது மிகவும் கடினமாக இருந்தது.

எனவே, உடலின் ஏனைய பகுதிகள் (வயிறு, நெஞ்சு, கால்கள்) நிலத்தில் தேய்ந்தபடி செல்வதைப் போன்று முகத்தையும் நிலத்தில் தேய்த்தபடி தலையை உயர்த்தாது அம் மூவர் குழு ஊர்ந்து சென்றது. அவ்விதம் ஊர்ந்தாலும் ஒரு வரப்பைத் தாண்டி மற்றைய வரப்புக்குச் செல்வதும் கடினமாகவே இருந்தது. வரப்புகளின் மேல் பகுதியை உரசியபடி எதிரியின் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தபடி இருந்தன.

எனவே, ஒரு வயலில் நீர் நிரம்பியதும் மற்றைய வயலுக்கு நீர் செல்வதற்காக வரப்புகளில் அமைக்கப்பட்டிருந்த அரை அடி அகலம் கொண்ட கதவு போன்ற பகுதியைத் தேடி அவர்கள் ஊர்ந்து சென்றனர். ஏனெனில் அந்த இடத்திற்கூடாக எமது உடலைப் புகுத்திச்செல்வதன் மூலமே துப்பாக்கிச் சன்னங்களில் இருந்து பாதுகாப்பைத் தேடமுடியும்.

இவ்விதமாக எதிரியின் பலம் மிகுந்த மேற்குப் பகுதி அரணிற்கு 25 யார் தொலைவு வரை அம் மூவரும் சென்றுவிட்டனர். அந்த இடத்திலிருந்து 10 அல்லது 15 யார் தூரத்தில் ஐந்து வேப்ப மரங்கள் வரிசையாக நின்றன. அவ் வேப்ப மரங்களுக்குக் கீழே கண்ணி வெடிகளும் வைக்கப்பட்டிருந்தன. அக் கண்ணி வெடிகளைச் செயலிழக்கச் செய்த பின் அம்மரங்களை தமது பாதுகாப்பு அரண்களாகமாற்றிக்கொண்டு, அதில் நிலைஎடுத்தபடி நின்று எதிரியின் பாதுகாப்பு அரணை தென்மேற்குப் பகுதியிலிருந்து பக்கவாட்டில் தாக்குவதன் மூலம் எதிரிக்கு ஒரு புதிய யுத்தமுறையை அறிமுகம் செய்யமுடியும். அதன்மூலம் அவனின் கவனத்தை எல்லாத் திசைகளிலும் திருப்பி எதிரியின் சுடும் திறனை (fire power) பரவச் செய்து அதன் மூலம் ஒட்டு மொத்தத்தில் எதிரியை பலவீனமடையச் செய்யலாம். அதன் பின் திடீரென எதிரியின் குகைக்குள்ளேயே மின்னலெனப்பாய்ந்து சென்று அவனது கோட்டைக்குள்ளேயே அவனுக்குச் சமாதி கட்ட முடியும்.

இந்த நோக்கத்தை மனதில் வைத்தபடி அவ் வேப்பமரங்களை அம் மூவரும் நெருங்குகிறார்கள்.

அப்பொழுது வேப்பமரத்தின் கீழே வைக்கப்பட்டிருந்த கண்ணிகள் வெடிக்கின்றன.

எமது தோழர்கள் அந்த நிலைகளுக்குச் செல்ல முன்னரே கண்ணிகள் வெடித்ததினால் வேப்பமரத்தை சுற்றியிருந்த அபாயம் நீங்கியது.

கண்ணிவெடித்ததினால் ஏற்படுத்தப்பட்ட புகை மண்டலத்தை சாதகமாக்கிய எமது தோழர்கள் உடனடியாகவே வேப்ப மரங்களை நோக்கி ஓடிச்சென்று அதில் நிலை எடுத்துக் கொண்டனர்.

அங்கிருந்தபடி மேற்குப் பகுதி அரணை நோக்கித் தாக்கத் தொடங்கினர்.

இப்பொழுது ''ப'' வடிவில் எதிரிகள் எமது தோழர்களால் சூழப்பட்டு இருந்தனர். இன்னமும் திறக்கப்படாது ஒரே ஒரு முனை மட்டும் மிஞ்சியிருப்பதாக எதிரிகள் நினைத்துக் கொண்டனர்.

அதுதான் ஆரம்பத்திலிருந்து வெற்றிடமாக இருந்த மேற்குப் பகுதியாகும். இது முள்ளிக்குளம் கடற்கரையை நோக்கி இருக்கிறது. (அக்கடற்கரையைப் பயன்படுத்தியே புளொட் இனர் தமது பயணங்களை மேற்கொண்டனர்.)

எதிரிகள் வெற்றிடம் என்று கருதிய மேற்குப் பகுதியிலிருந்து சற்றுத்தள்ளி எமது தோழர்கள் சிலர் நிலை எடுத்தபடி இறுதிச் சண்டைக்காகப் பொறுமையுடன் காத்துக்கிடந்தனர்.

இதே நேரம் முள்ளிக்குள அணைக் கட்டுடன் இருந்த கிழக்குப் பகுதி அரண்களும் எமது வீரர்களால் வெற்றி கொள்ளப்பட்டுவிட்டது. இதைத் தொடர்ந்து, தெற்குப் பகுதியிலிருந்த அரணும் எம்மிடம் வீழ்ச்சி அடைகின்றது. இப்பொழுது நேரம் 9.00 மணியைத் தாண்டிவிட்டது. இன்னமும் மேற்குப் பகுதி அரண்மட்டும் தன்னந்தனியாக இருக்கின்றது.

நாம் கைப்பற்றிய அரண்களுக்குள் இருந்து தப்பியோடிய புளொட் கொலைஞர்கள் எல்லோரும் மேற்குப் பகுதி அரணுக்குள்ளேயே சென்று விட்டனர்.



தென் பகுதி ஊடாக முகாமின் ஒரு தோற்றம்

இந்த மேற்குப் பகுதி அரணுக்குள் தான் கொலைகாரன் சங்கிலியும் இருந்தான்.

இந்த அரணுக்குள் இருந்தவர்களைச் சரணடையுமாறு வேண்டுகோள் விடுத்தோம். ''உங்களால் இனிச் சண்டையிட முடியாது, வீணாக மரணத்தைத் தேடிக்கொள்ளாதீர்கள் - உங்களை நாங்கள் நாற்புறத்திலும் சூழ்ந்து விட்டோம். இனித் தப்பியோட முடியாது எனவே சரணடையுங்கள்'' எனக் குரல் கொடுத்தோம்.

ஆனால், சரணடையத் தயாராக இருந்த ஏனைய புளொட் அங்கத்தவர்களை சரணடையவிடாது சங்கிலி தடுத்து விட்டான்.

சங்கிலிக்கு நன்றாகத் தெரியும் தான் செய்த கொலைகளுக்கும், அட்டூழியங்களுக்கும் கைது செய்யப்பட்டால், விசாரணைக்குட்படுத்தப் படுவேன் என்று. எனவே! தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, சுற்றியிருந்த மற்றவர்களைச் சரணடையவிடாது தடுத்தான். இதனால், அவ் அரணில் இருந்தவர்களை உயிருடன் பிடிப்பதென்பது இயலாமல் போய்விட்டது

(தாக்குதலின் போது காயமடைந்த நிலையில் எம்மால் கைது செய்யப்பட்ட புளொட் அங்கத்தவன் ஒருவன் மேற்படி தகவலைத் தந்தான். பின்பு, அவனது காயங்களிலிருந்து அதிக இரத்தம் வெளியேறி விட்டதனால் அவன் இறந்து விட்டான்).

சரணடையுமாறு நாம் விடுத்த வேண்டுகோள் புறக்கணிக்கப் பட்டதால், நாம், மீண்டும் மேற்குப் பகுதியிலிருந்த சங்கிலி - இருந்த அரணைத் தாக்கத்தொடங்கினோம். மின்னல் தாக்குதல் ஒன்றின் மூலம் எதிரியை வெற்றி கொள்ளுமுகமாக கப்டன் அமலன் மேற்குப் புற அரணை நோக்கிப் பாய்ந்து சென்று தாக்கினான். கிட்டத்தட்ட புளொட் கொலைஞர்களின் முகாம் எமது கட்டுப்பாட்டிற்குள் வந்து கொண்டிருந்த அந்த இறுதித் நிமிடத்தில் கப்டன் அமலன் எதிரியின் குண்டுபட்டு மரணத்தைத் தழுவுகின்றான்.

இவ் அரண்களுக்கு மிக அண்மையில் நின்று நாம் தாக்குதலைத் தொடங்கியதால் அவ் அரண்களுக்குள்ளே சிறிய துவாரங்களுக்கூடாக துப்பாக்கி முனைகளை நீட்டி எம்மை நோக்கிச் சுட்டுக் கொண்டிருந்த எதிரிகளின் இலக்குகளை முறியடிப்பது எமக்குச் சிரமமாக இருக்கவில்லை.

இப்பொழுது! அவ் அரணுக்குள் நின்ற பல புளொட்டினர் குண்டுபட்டு வீழ்ந்து விட்டனர்.

இதுவரை நேரமும் அனேகரின் உயிரை அவசியமில்லாமல் பிரிய வைத்த கொலைஞன் சங்கிலி, தனது அரணைவிட்டு ஒரு சிலருடன் வெளியேறி, வெற்றிடமாக இருந்ததெனதான் கருதிய மேற்குத்திசையால் தப்பி ஓடிக்கொண்டிருந்தான்.

அவ்விதம், அவர்கள் தப்பி ஓடியபோது அவர்களிடம் பெரிய ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை. ஆயுதங்களை அரணுக்குள் எறிந்துவிட்டே அவர்கள் தப்பி ஓடிக்கொண்டிருந்தனர்.

தனது உயிரைக் காப்பதற்காக, சரணடைய வந்த பல புளொட் உறுப்பினர்களை சரணடையவிடாது; அவர்களின் கைகளில் ஆயுதங்களைத் திணித்து பலாத்காரமாகச் சண்டையிட வைத்தவன் இப்போது தனது ஆயுதத்தையும் எறிந்து விட்டுத் தப்பி ஓடிக்கொண்டிருந்தான்.

நிராயுதபாணிகளான இவனையும் இவனுடன் ஓடிக்கொண்டிருந்தவர்களையும் சரணடையுமாறு வடக்கு, மேற்குப் பகுதிகளில் நின்ற எமது குழுக்கள் குரல்கொடுத்தன.

ஆனால், அவர்களோ, ஓடித் தப்பிவிடலாம் என்ற எண்ணத்துடன், எமது குரலையும் அசட்டை செய்து; அங்கிருந்த காட்டுப் பகுதியுள் புகுந்துவிட முயற்சித்தனர். ஆனால், ஏற்கனவே தாக்குதலில் ஈடுபடாதவாறு மேற்குப்பகுதியிலேயே மறைந்திருந்த எமது குழு வொன்றின் தாக்குதலில் கொலைஞன் சங்கிலியும், அவனது கூட்டாளிகளும் பலியானார்கள்.

### 42 புளொட் கொலைஞர்களின் மரணத்துடன்

சரியாக காலை 9-43 மணிக்கு முள்ளிக்குளம் புளொட் கும்பலின் முகாம் எமது கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

இதே சமயம், அவ்விடத்திலிருந்து சுமார் 10 மைல் தூரத்திலிருந்த சிலாவத்தை சிங்கள இராணுவ முகாமிலிருந்தும், சுமார் 15 மைல் தூரத்திலிருந்த முருங்கன் இந்தியஇராணுவமுகாமிலிருந்தும் புளொட் கும்பலுக்கு உதவி கிடைக்கலாம் என நாம் கருதியதனால் அவ் உதவிகளைத் தடுப்பதற்காக இப் பாதைகளில் நவீன ஆயுதங்களுடன் எமது குழுக்களை நிறுத்தியிருந்தோம்.

ஆனால், இந்திய விமானப் படையின் MI 24 என்ற உலங்குவானூர்தி(யுத்தஹெலிகொப்டர்) மாத்திரம் முள்ளிக்குளம் காட்டுப்பகுதியை நோக்கி ஏவுகுண்டுத் (செல்) தாக்குதலை மேற்கொண்டது.


முள்ளிக்குளப் பிரதேசம் புளொட் கும்பலின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் வெற்றிக்காக எமது 11 தோழர்கள் தமது உயிர்களை அர்ப்பணித்தார்கள்.

அந்தத் தோழர்களின் உடல்கள், அதே முள்ளிக்குளத்தின் கடற்கரையோரமாகப் புதை குழியினுள் வைக்கப்பட்டன.

அப்போது நிலவிய ஒரு யுத்த சூழல், ஒரு புதைகுழியினுள் 2 அல்லது 3 தோழர்களை ஒன்றாகப் புதைக்க வேண்டிய வேதனையான ஒரு நிகழ்வை எமக்கு ஏற்படுத்தியது.

இத் தாக்குதல் நடந்து ஒரு வருடத்தின் பின் (20-5-1990) வீரமரணமடைந்த எமது தோழர்களின் நினைவாக முள்ளிக்குளத்திலேயே அமைக்கப்பட்ட நினைவாலயம் அந்தத்தோழர்களின் பெற்றோர்களாலேயேதிறந்து வைக்கப்பட்டது.

துரோகிகளின் ஆதிக்கத்தை முள்ளிக்குளம் கிராமத்திலிருந்து அப்புறப்படுத்திய அந்த மாவீரர்களின் நினைவுத் தூண்கள், இன்று - அந்தக் கிராமத்தின் நடுவே தலை நிமிர்ந்து நிற்கின்றன. ★



வீர மரணமடைந்த எமது 11 தோழர்களி[illegible] புதைகுழிகளுக்குள்தான் வைக்கப்பட்டன.

www.eelamview.com

www.eelamview.com



## ஒரு போராளியின்.....

(11ஆம் பக்கத் தொடச்சி)

யாருக்கோ காயம் பட்டிருக்கிறது...அதுவும் பலமான காயமாகத்தான் இருக்கவேண்டும்.. இல்லையென்றால் எனது ஆடைமுழுவதும் எப்படி இரத்தம் தோய்ந்து...

"ஐயோ... ஓடிவாங்கோ ... எனக்குக் காயம்பட்டிட்டுது..." - ஆனந்தி அக்கா பலமாகக்கத்துகிறாள்.

எங்கள் கூடாரத்துக்கு எல்லோரும் ஓடிவருவது-இருட்டிலும் காலடி ஓசைகளின்மூலம் உணரமுடிகிறது.

இருட்டில் அங்குமிங்கும் துழாவி 'டோர்ச்லைற்'றை எடுத்து மிதிலாக்கா படுத்திருந்த பக்கம் அடிக்கிறேன்.

மிதிலா அக்காவின் முழங்கால்பகுதியிலிருந்து இரத்தம் 'குபுகுபு' என வழிந்துகொண்டிருக்கிறது...

அடுத்த ஷெல் வந்து விழுமுன் எல்லோரும் பதுங்கு குழிக்குள் போய்விடவேண்டும்.

மிதிலா அக்காவினால்நடக்கவோ,ஓடவோ நிச்சயம் முடியாது...

அவவையும் தூக்கிக்கொண்டு ஓடவேண்டும்.

ஒரு கையால் டோர்ச் லைற்றை அடித்தபடி-அவவை தள்ளிப் போய் ஷெல் வெடிக்கிறது.

மீண்டும்சிறிது தூரம்போக- அடுத்த ஷெல...

ஒருமாதிரி அனைவரும் பதுங்கு குழிக்குள் போய்ச் சேர்ந்ததும்- 'ராதை எங்கே?'

'ராதை ஏன் எம்முடன் வரவில்லை?'

அனைவர் மனதிலும் இதே கேள்வி...

எறிகணைகள், தொடர்ச்சியாக விழுந்துகொண்டேயிருக்கின்றன...

ஆனந்தி அக்கா வலி பொறுக்க முடியாமல் துடித்துக்கொண்டேயிருக்கிறாள்.

அந்த வேதனை ஒரு பககம்-ராதையைக்காணவில்லை என்று போய்ப்பார்த்து வரக்கூட முடியாமல் குண்டுமாரி பொழிந்துகொண்டிருந்தது. இதயத்தில் ஏற்படுத்திய ரணம் ஒரு பக்கமுமாய்......

தொடர்ந்து வந்த ஒருமணி நேரமும்,பதுங்குகுழியே தஞ்சம் என இருக்கிறோம்.

ஒருவாறு எறிகணை வீச்சு ஓய்கிறது.

கூடாரத்தை நோக்கி ஓடுகிறோம்.

அங்கே...

முகத்தின் ஒரு பகுதி சிதைந்த நிலையில் இரத்த வெள்ளத்தில் ராதை 'ஆழ்ந்த துயிலில்' - அடங்கிப் போய்க்



வீரமரணமடைந்த நிலையில் 2வது லெப். ஆனந்தி

மெதுவாய்த் தூக்கி இழுத்துக் கொண்டு பதுங்குகுழி நோக்கிவிரைகின்றேன்.

இதற்கிடையில் மேலும் இருவர் அவ்விடம் வந்துவிட, எல்லோருமாய் மிதிலா அக்காவைப் பதுங்கு குழிக்குள் கொண்டுபோய்ச் சேர்க்க - இரண்டு பேர் அவவுக்கு வேண்டிய முதலுதவிச் சிகிச்சை செய்கிறார்கள். நானும், மற்றவர்களும் வெளியேவந்து ஆனந்திஅக்காவிடம் ஓடுகிறோம்...

தொடையைக் கிழித்துக்கொண்டு ஷெல்துண்டொன்று வயிற்றினுள் பாய்ந்ததனால் இரத்தம் ஆறெனப் பெருக-

தாங்கமுடியாத வேதனையில் முனகியவாறு ஆனந்தி அக்கா அப்படியும் இப்படியும் புரண்டுகொண்டுகிடக்கிறாள்.

எங்கள் மூடைகளைத் தன் தலையில்சுமந்து கைகொடுத்த எங்கள் ஆனந்தி அக்கா வலியால் துடிதுடித்துக்கொண்டிருக்க - அந்த வலியின்வேதனையை எங்களால் பகிர்ந்துகொள்ள முடியவில்லையே என்ற ஏக்கத்தில் எம் இதயம் கனக்கிறது. உணர்ச்சிகளால் நெகிழ்ந்துபோகவோ கரைந்துபோகவோ அது இடமுமல்ல... நேரமுமல்ல...

அவவை மெதுவாகத் தூக்கிக்கொண்டு பதுங்கு குழியை நோக்கி நாங்கள் விரைவாக நடக்கத் துவங்க-

'ஙய்ங்' காரமிட்டபடி அடுத்த ஷெல் எமது முகாமை நோக்கி வெறியுடன் வருகிறது.

அப்படியே குப்புறப் படுக்கிறோம்...

பலத்த ஓசையுடன்-சற்றுத் கிடக்கிறாள்.

பத்து மணிக்கு - முதல் விழுந்த எறிகணை - எங்கள் அன்பு ராதையை எம்மிடமிருந்துபிரித்துவிட்ட சோகத்தைப் பகிர்ந்துகொள்கிறோம்...

என் ஆடைகளை நனைத்திருந்தது, என் இனிய ராதையின் குருதியா...?

இதயம் பாறையாய்க் கனக்கிறது...

ஆனந்தி அக்காவின் உயிர், ஜீவமரணப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தது.

அவளுடைய உயிரையாவது காப்பாற்றுவோம் என்ற நம்பிக்கையில் - எம்மால் முடிந்த சிகிச்சையைச்செய்தபோதும்- ஏற்கனவே அதிக இரத்தம் வெளியேறிவிட்ட காரணத்தினால் அடுத்த நாள் - ஆடி 4-ந்தேதிஅந்த இனிய உயிரும் எம்மைவிட்டுப் பிரிந்தது.

போருக்குப் புறப்படும் வீர மறவர்களுக்குப் பெண்கள் இரத்தத்தால் நெற்றித் திலகமிட்டு அனுப்புவதைப் பழைய வரலாறுகளில் படித்திருக்கிறோம்...

இங்கே-

தங்கள் உடலையே குருதியால் நனைத்து - தமிழீழப் போராட்டத்தை உறுதியுடன் தொடர்வதற்கு எம்மையெல்லாம் ஆசீர்வதித்துப் போயிருக்கிறார்கள் எமது வீராங்கனைகள்.

ஆனந்தியும் ... ராதையும்...

அவர்களது ஆசிகள் நிச்சயம் பலிக்கும் ...

தமிழீழப் போராட்டம் வெற்றிவரலாறு படைக்கும்.

- சித்ரா




எங்கள் மண் வரண்டு
எழிலிழந்து கிடக்கிறது.
பொங்கும் நிலா கூடப்
பொழியும்; குளிராது.
தென்றல் வரும்; வீசும்
தேசம் சிரியாது.
என்றிவைகள் மீண்டும்
இதமாகும் தெரியாது.

மண்ணுக்குப் பொட்டிட்ட மாதிரியாய்
புதைகுழிகள்
எண்ணுக் கணக்கின்றி எழுகின்ற பூமியிது.
இன்னும் புதைகுழிகள் எழும்.
புலிவீரர்
கண்ணுக்குத் தமிழீழம் காட்சிதரும் வரையில்
இன்னும் புதை குழிகள் எழும்.

ஏனென்றால் ...
கொல்லைக்குள் வந்த குரங்கை எதிர்த்து நின்று
எல்லைக்குஅப்பால் எறிந்து கலைத்து விட்டோம்
வந்திங்கு ஆதிக்க வலையை விரித்தவரை
நிந்தித்தோம் ;
நாங்கள் நிர்மூலம் செய்து விட்டோம்.
ஆனாலும் எல்லாமும் ஆச்சா ... இல்லைப்பார்!
மானாகி விட்டதா மதயானை ...? இல்லைப்பார்!
காட்டெருமை எங்கள் கடப்புக்குள் மேய்கிறது.
ஆனை திமிர் கொண்டு அலைகிறது.
எங்களது
சேனைக்குள் வந்தும் மிதிக்கிறது.
இத்தனையும் நடக்கிறது. என்றாலும் வயல்காரர்
நித்திரையாய் கிடக்கின்ற நிகழ்வே தொடர்கிறது.
கவனம் ... இனித்தானே பயணம் இருக்கிறது.
கவனம் ... இனித்தானே கதையே தொடங்கிறது
வாருங்கள் ஒன்றாக வடம் பிடிப்போம்
போராட்டத்
தேரை இழுத்தெங்கள் தேசத்தை விடுவிப்போம்

மண்ணுக்குப் பொட்டிட்ட மாதிரியாய்
புதைகுழிகள்
எண்ணுக் கணக்கின்றி எழுகின்ற பூமியிது.
இன்னும் புதைகுழிகள் எழும்
புலிவீரர்
கண்ணுக்குத் தமிழீழம் காட்சிதரும் வரையில்
இன்னும் புதைகுழிகள் எழும்.

www.eelamview.com

www.eelamview.com



# திருக்கோணமலை மாவட்டத்தில்
# சிங்களக் குடியேற்றங்களும்
# சிங்கள இராணுவ முகாம்களும்

திருகோணமலையில் இன்று 51க்கு மேற்பட்ட இராணுவ முகாம்களும் 20க்கு மேற்பட்ட காவல்துறையினரின் முகாம்களும் இருக்கின்றன. 1010 ச. மைல் கொண்ட திருமலை மாவட்டத்தில் 71க்கும் மேற்பட்ட இராணுவ-காவல் துறையினரின் முகாம்கள் உள்ளன. அதாவது 15 ச.மைலுக்கு ஒரு முகாம் வீதம் உள்ளது. இவை தமிழ், முஸ்லீம் மக்களைப் பயமுறுத்தி படுகொலை செய்து அவர்களை, அவர்களது வழிவழித் தாயகத்தில் இருந்து கலைத்துவிட்டு, சிங்கள மக்களைக் குடியேற்றவும் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவுமே இருக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை, மாவட்டத்தின் எல்லைப் பிரதேசங்களில் படிப்படியாக திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை, 1952ம் ஆண்டு தொடக்கம் ஏற்படுத்தினார்கள்.

அவையாவன: கந்தளாய், அல்லை, மொரவெவ (முதலிக்குளம்), கல்மெட்டியாவ (கல்முட்டியான்குளம்), வான்-எல (வானாறு), பதவியா (பதிவில் குளம்), மகாதிவுல் வெவ (பெரியவிளான்குளம்), என்ற புதிய சிங்களப் பெயர்களுடன் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டு, தமிழர்களின் வழிவழித் தாயகம் பறித்தெடுக்கப்பட்டது.

குடியேற்றங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் நடத்தப்பட்டன.

பாரிய நீர்ப்பாசனக் குடியேற்றத்திட்டங்கள்:

கிராம அபிவிருத்தி, விரிவாக்கக் குடியேற்றம்.

நகர அபிவிருத்தி, விரிவாக்கக் குடியேற்றம்.

இளைஞர் விவசாயக் குடியேற்றங்கள்.

மத்திய தரப்பினர் குடியேற்றங்கள்.

மீனவர் வீடமைப்புத் திட்டங்கள்.

இதின் பாரிய குளத்திட்ட குடியேற்றங்கள்மூலமே பெருமளவில் குடியேற்றங்கள் நடைபெற்றன.

பழைய குளங்களைத் திருத்தி அவற்றைச் சூழவுள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர் மேட்டு நிலங்களிலும் வயல் நிலங்களிலும் குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன. அத்திட்டங்கள் பின்வருமாறு:

| திட்டங்கள் | குளம் | உ. அ. அதிபர் பிரிவு |
|---|---|---|
| (1) கந்தளாய் குடியேற்றத்திட்டம் | கந்தளாய் | கந்தளாய் |
| (2) அல்லை குடியேற்றத்திட்டம் | அல்லை | சேருவில |
| (3) கல்மெட்டியாவ குடியேற்றத்திட்டம் | கல்மெட்டியாவ (கல்முட்டியான் குளம்) | தம்பலகாமம் |
| (4) மொறவேவ குடியேற்றத்திட்டம் | மொறவேவ (முதலிக்குளம்) | மொறவேவ |
| (5) வானெவ குடியேற்றத்திட்டம் | வானாறு (வானெவ) | கந்தளாய் |
| (6) பதவி சிறிபுர குடியேறத்த்திட்டம் | பதவியா குளம் (பதிவில்குளம்) | பதவி சிறிபுர |
| (7) மகாஇவுல்வெவ குடியேற்றத் திட்டம் | மகாஇவுல்வெவ (பெரியவிளான்குளம்) | மொறவேவ |

(1) கந்தளாய், அல்லை, மொறவேவ, பதவியாவில் நடந்த சிங்களக் குடியேற்றத்தால் சிங்களவர் பெரும்பான்மையாயுள்ள கந்தளாய், சேருவில, மொறவேவ, பதவி சிறிபுர உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்பட்டன.

இந்த நாலு பிரிவும் பழைய கட்டுக்குளம் பற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கோமரங்கடவெல பிரிவும், 1010 ச. மைல் கொண்ட திருக்கோணமலை மாவட்டத்தில், 600 ச. மைல்களை எடுத்துக் கொண்டன.


(2) திருக்கோணமலையில் 1921ல் 4 வீதம் இருந்த சிங்கள மக்களின் எண்ணிக்கை 1981ல் 35 வீதமாக மாறியது.

(3)1981 குடிசன மதிப்பீட்டின்படி தமிழர்களும், முஸ்லீம்களும், சிங்களவர்களும் ஏறக்குறைய ஒரே அளவினராக இருந்தபோதும் புதிதாக உருவாக்கப்பட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள்மூலம் சிங்களவர்களுக்கு 5 பிரிவும், தமிழர்களுக்கு 3 பிரிவும், முஸ்லீம்களுக்கு 2 பிரிவுமே ஒதுக்கப்பட்டன.

உதாரணமாக 72,451; மக்களையும் 99 ச. மைல் பரப்பளவையும் கொண்ட பட்டணமும் சூழலும் ஓர் உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும் 80 ச. மைல், 99 ச.மைல் பரப்பளவையும் 9359, 7076 மக்களைக் கொண்ட முதலிக்குளம் (மொரவேவ) குமரேசன் கடவை (கோமரன், கடவை) ஆகிய பகுதிகளுக்கு தனித்தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் ஒதுக்கப்பட்டுள்ளது.

(4) இந்தக் குடியேற்றங்கள் திட்டமிட்ட நிர்வாகப் பிரிவுகள் மூலம் ஒன்றிணைக்கப்பட்டு 1976-ம் ஆண்டு புதிதாக சேருவெல சிங்கள தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது. இது 574 ச. மைல்களைக் கொண்டிருந்தது. இது 266 ச.மைல்களைக்கொண்ட திருக்கோணமலை தேர்தல் தொகுதியிலும், 170 ச. மைல்களைக் கொண்ட மூதூர் தேர்தல் தொகுதியிலும் பார்க்க 133 ச. மைல்களைக் கூட கொண்டுள்ளது.

இன்று சிங்களக் குடியேற்றங்களைத் தொடர முக்கியமாக ஒவ்வொரு மைலுக்கு ஒரு படை முகாம் திருக்கோணமலையில் உண்டு. இது தவிர, ஊர் காவல் என்ற பெயரில் சிங்கள மக்களுக்கு அரசு ஆயுதங்களைக் கொடுத்துள்ளது.



முக்கிய வீதிகளான திருக்கோணமலை அனுராதபுர வீதி, அல்லை, கந்தளாய் வீதி, திருக்கோணமலை-கண்டி வீதி ஆகியவற்றில் தொடர்ச்சியாக படை முகாம்கள் உண்டு. (அரசு இப்படை முகாம்கள் சிங்கள மக்களைப் பாதுகாக்க என கூறுவதன் மூலம் அரச படை சிங்கள மக்களை மட்டும் பாதுகாக்கும் என வெளிப்படையாக ஒத்துக் கொண்டுள்ளது) இந்தப்படை முகாம்களை வைத்துகொண்டு நேரடியான குடியேற்றமும் மறைமுகமாக சிங்கள மக்களை அத்துமீறி அரச காணிகளில் அல்லது தமிழ் முஸ்லீம் மக்களின் தனியார் காணிகளில், கோயில், பள்ளிவாசல் காணிகளில் தடைசெய்யப்பட்ட தேக்கம் காடுகளில் சிங்களக் குடியேற்றமும் செய்கின்றது. பின் அவர்கள் குடியேறிய பகுதிகளுக்கு காணி உறுதியும் வழங்குகின்றது.

1977-ம் ஆண்டில் இருந்து 1983-ம் ஆண்டுவரை திருக்கோணமலை மாவட்டத்தில் இடம் பெற்ற வன்செயல்கள் எல்லாம் படை வீரர்களாலேயே நடத்தப்பட்டன. இதன் மூலம் தமிழ், முஸ்லிம் மக்கள் அடித்து விரட்டப்பட்டு அந்த நிலங்களில் புதிய சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றன.

### திருக்கோணமலை - கண்டி வீதி

திருக்கோணமலையில் இருந்து கந்தளாய் போகும் வழியில் கண்டி - திருமலை வீதியில் அமைந்திருக்கும் பகுதிகளில் ஒன்றுதான் பாலம் போட்டாறு என்னும் தமிழ்க் கிராமம். இங்கு பழம் பெருமை வாய்ந்த கண்ணகி அம்மன் கோயில் ஒன்றுண்டு. 1985-ம் ஆண்டு இங்கு வாழ்ந்த மக்கள் சிங்களப் படையால் கொலை செய்யப்பட்டு விரட்டி அடிக்கப்பட்டார்கள். அங்கு இன்று சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு அதற்கு ஜெயபுர எனப் பெயரும் மாற்றப்பட்டுள்ளது.

இன்று 'ஜெயபுர' என அழைக்கப்படும் பாலம் போட்டாற்றில்இருந்து திருக்கோணமலைக்கு அண்மையிலிருக்கும் ஆண்டான் குளம் வரையிலான பகுதிகள் யாவும் வனபரிபாலனப் பகுதிக்குச் சொந்தமானவை. ஆனால் 1977ல் இருந்துஇங்குசிங்களவர்கள்குடியேற்றப்பட்டுவருகின்றார்கள்

பாலம் போட்டாற்றில் இருந்து (ஜெயபுர) ஆண்டான் குளம் வரை 1983-ம் ஆண்டுக்குப் பின் அமைக்கப்பட்ட சிங்களப் படை முகாம்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(1) ஜெயபுர இராணுவ முகாம்.

(2) 6-ம்கட்டை இராணுவ முகாம்.

(3) 5-ம்கட்டைஇராணுவ முகாம்

(4) மங்கிபிரிஜ் (இராணுவ பயிற்சிப் பாடசாலை)

(5) 4-ம்கட்டை இராணுவ முகாம்

(6) 4- ம் கட்டை ( காவல் துறை நிலையம் )

(7) ஆண்டான்குளம் கடற்படை முகாம்

(8) ஆண்டான் குளம் காவல்துறைநிலையம்.

### திருக்கோணமலை - அனுராதபுரம் வீதி (பன்குளம் வீதி)

திருக்கோணமலை - பன்குளம்வீதியில் எல்லைக் கிராமமான ரொட்டக் குளம் (ரொட்ட வேவா) வரையிலான 30 மைல் நீளப் பிரதேசத்தில் 11 சிங்களப் படை முகாம்கள் உண்டு.

பன்குளம், முதலிக்குளம் பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் 1977, 1983 வரையிலான பகுதிகளில் சிங்களப்படைகளால் கொலை செய்யப்பட்டு விரட்டப்பட்டு, சிங்கள மக்கள் குடியேற்றப் பட்டார்கள். 'முதலிக்குளம்' இன்று 'மொறவேவா' எனப் பெயர் மாற்றப் பட்டுள்ளது. பன்குளத்தில் அபயபுரம் வரையுள்ள பகுதிகளில் செறிந்து வாழ்ந்த தமிழ் மக்களும் இக்காலப் பகுதிகளில் விரட்டி அடிக்கப்பட்டு அப்பகுதிகளில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டார்கள். திருக்கோணமலை பன்குள வீதியில் உள்ள 11 படை முகாம்கள் கீழ் தரப்பட்டுள்ளன.

(1) வில்கம் விகாரை

(2) வில்கம் விகாரைச் சந்தி.

(3) 10-ம் கட்டை

(4) பன்மதவாச்சி

(5) பன்குளம் நீர்ப்பாசனத் திணைக் களம்

(6) பன்குளம் காவல் நிலையம்

(7) பன்குளம் (பாடசாலை)

(8) முதலிக்குளம் (மொறவேவா) ஆகாயப் படை

(9) முதலிக்குளம் மொறவேவா காவல் நிலையம்

(10) நொச்சிக் குளம்

(11) மீகஸசாவ.

கந்தளாய் சீனித் தொழிற்சாலை, கரும்பு உற்பத்திக்கு என அரசால் எடுக்கப்பட்ட காணிகளில் எல்லாம் சிங்களவர் குடியேற்றப்பட்டனர்.

ஜே. ஆர். -- ராஜீவ் ஒப்பந்தத்தின் பின் இப்பாதையின் இரு பக்கத்திலும் கருப்பஞ்சோலையில் இருந்து 12 மைல் கள்வரை காணிகள் அளவை செய்யப்பட்டு 2, 1/2 ஏக்கர் வீதம் 500 சிங்களக் குடும்பங்களை குடியேற்றும் வேலைகள் ஆரம்பமாயின.

(15ஆம் பக்கம் பாக்க)

www.eelamview.com

www.eelamview.com



## விடுதலைப்புலிகள்.,..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முன்னணியின் செயல் திட்டங்களை வகுத்து, செயல்படுத்தும் முக்கிய பொறுப்புக்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர் ஏற்றிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் பொதுச்சபைக் கூட்டத்தில் பல விடயங்கள் குறித்துப் பேசப்பட்டன.

குறிப்பாக சம்பளத்தில் உள்ள ஏற்றத்தாழ்வு, சீதனக் கொடுமை, குறிப்பிட்ட வேலைகளை மட்டும்தான் செய்யலாம் என்ற மனப்பான்மை இவற்றை எந்த வகையில் நீக்கலாம் என்பது குறித்தும் பெண்களை தங்கு நிலையில் இருந்துஎப்படி மாற்றலாம்.என்று குறித்தும் கூடிய கவனம் செலுத்தப் பட்டது.

இத்தோடு கணவனை இழந்த, பெண்கள் ஆதரவற்ற குழந்தைகள் இவர்கள்குறித்து அமைப்பு ரீதியாக என்ன செய்யலாம் என்றும் பேசப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் இருந்து வந்த பெண்கள் எல்லோரும் உடனடியாக விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி அமைப்பை பரந்துபட்ட ஓர் அமைப்பாக்கவேண்டும் என வலியுறுத்தினார்கள்.

கிழக்கு மாகாணத்தில் பெண்களுக்கு மிகப் பெரிய அளவில் சிங்கள இராணுவத்தின் அச்சுறுத்தல் இருந்த போதிலும், அங்கிருந்து வந்தவர்கள் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைக் கட்டி வளர்க்க விரும்பியதும், அதன் மூலம் சமூகத்தில் பெரிய புரட்சிகர மாற்றங்களை செய்ய விரும்பியதும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூலம் மக்கள் பெற்ற விழிப்புணர்வையும் மனோபலத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டியது.

இதற்கு சிறந்த உதாரணங்களில் ஒன்று அன்னை பூபதி கணபதிப் பிள்ளையின் சாகும் வரையிலான உண்ணா விரதப் போராட்டமாகும். அண்மையில் ''சித்திரைப் புத்தாண்டு நங்கை'' என்னும் பெயரில் பெண்களைக் கவர்ச்சிப் பொருட்களாகப் பயன்படுத்தி நடை பெற இருந்த அழகுராணிப்போட்டி தமிழீழத்தில் நடைபெறாமால் போனமை மகளிர் முன்னணிக்குகிடைத்த வெற்றியாகும். விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி ஒரு புரட்சிகர திட்டத்தை செயல்படுத்தும் ஆற்றலோடிருக்கின்றது இத்திட்டங்களைச் சீர்குலைக்கும் வண்ணம் எடுக்கப்படும் முயற்சிகளை, தடுக்கும் ஆற்றலையும் அது பெற்றிருக்கின்றது. பெண் விடுதலை என்பது பெண்கள் ஆண்களைப் போல் மாறுவது என்று பலர் பிழையாக விளங்கிக் கொள்கிறார்கள்.

பெண்கள் பலவீனமானவர்கள் மென்மையானவர்கள் எனக் கூறப்படும், கருத்துக்கள் யாவும் பிழை. பெண்கள் ஆண்களுக்கு சமைத்தவர்கள் அல்லர். ஆண்களைப் போல் பெண்களும் செயல்பட முடியும் என்பதை விடுதலைப் புலிகள் மகளிர்அணி நடைமுறையில் செயல் மூலம் காட்டி வருகின்றது.

பெண்ணானவள் சமூக கலாசார ஒடுக்கு முறைகளில் இருந்து விடுபட வேண்டும்.

தங்கு நிலையில் வாழும் நிலையில் இருந்து மாறவேண்டும்.

சமூக முன்னேற்றத்திற்காக, தேச விடுதலைக்காக முன்னின்று உழைக்க வேண்டும்.

தமிழீழம், பெண்களிடம் இருந்து புரட்சிகர சிந்தனை கொண்ட ஒரு நாட்டை அமைக்க மிகப் பெரும் அளவில் பங்களிப்பை எதிர் பார்த்து நிற்கின்றது.

## இஸ்ரேலின்....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், இந்தியாவுடனும உறவைப் பலப்படுத்த பிரேமதாச அரசு விரும்புகிறது. மிகப்பெரிய வியாபாரச் சந்தையாகிய இந்தியாவை பகைத்துக் கொண்டு தனது பொருளாதாரத்தைக் கட்டி வளர்ப்பதில்உள்ள நடைமுறைச் சிக்கல்களையும்ஸ்ரீலங்காஅரசு இப்போது உணர்ந்துள்ளது.

மற்றய நாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்வதிலும் பார்க்க இந்தியாவில் இருந்து குறைந்த விலையில் அதே பொருட்களை இறக்குமதி செய்யலாம் என்பது ஸ்ரீலங்காஅரசிற்குதெரியாததல்ல.

எனவேதான் இந்தியாவுடனும் உறவைப் பலப்படுத்த பிரேமதாசா அரசு விரும்புகின்றது. இந்தியாவுடனான உறவு நிலைக்குத்தடையாக இருக்கும் காரணிகளுள் ஒன்றான இஸ்ரேலிய நலன்புரி அமைப்பை மூடுவதன் மூலம் இந்தியாவுடனும் நெருக்கமான உறவை ஏற்படுத்த ஸ்ரீ லங்கா அரசு விரும்புகின்றது.

திரு பிரேமதாசா எந்த சிங்கள மக்களின் ஆதரவோடு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றாரோ அந்த மக்களிடம் தான் ஜெ.வி.பியும்வளர்ந்தது.

ஜெ. வி. பி அழிப்பு என்ற பெயரில் அவருக்கு ஆதரவு தந்த, அவரை நம்பிய சிங்கள மக்களே ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர் அந்தக் காலப்பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர்.

அடுத்து வரும் ஜனாதிபதி தேர்தலில் தனது வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்தவும் தனது அரசியல் வாழ்வை உறுதிப்படுத்தவும் வட - கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்களினதும் குறிப்பாக முஸ்லிம் மக்களினதும் ஆதரவு பிரேமதாசா அரசிற்கு அவசியமாகின்றது.

இன்றைய நிலையில் எவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டாலும் அவர்களின் வெற்றியை தமிழ் மக்களினதும், முஸ்லிம் மக்களினதும் வாக்குகளே தீர்மானிக்கும் சூழ்நிலை உள்ளது.

இஸ்ரேலிய நலன்புரியமைப்பை மூடியதன் மூலம் இலங்கை வாழ் முஸ்லிம் மக்களையும் திருப்திப்படுத்த பிரேமதாசா முயன்றிருக்கின்றார்.

அத்துடன், இஸ்ரேலியரின் உதவி இன்றி ஸ்ரீலங்கா அரசே தனது இராணுவத்திற்கு பயிற்சியை அளிக்கும் ஆற்றலையும் இன்று பெற்றிருக்கின்றது. மேலும் பாகிஸ்தானோடும் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கின்றது.

இஸ்ரேலின் நலன்புரி அமைப்பை இங்கு இயங்க விடுவதன் மூலம் அமெரிக்காவிடமிருந்து கைமாறாகப் பெரும் இராணுவ உதவிகளை ஸ்ரீலங்கா அரசு எதிர்பார்த்தது. ஆனால் அமெரிக்க அரசு ஓரளவுக்கு மேல் ஸ்ரீலங்கா அரசிற்கு உதவ மறுத்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த சூழ்நிலைகளில் தான் இஸ்ரேலிய நலம்புரி அமைப்பை மூட ஸ்ரீலங்கா அரசு முடிவெடுத்தது.

## பட்டித்திடல்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

விளங்கவில்லை. அடுத்து அவளுக்கும் சித்திரவதைகள் ... வேதனைகள்... ஈற்றில் அவளது உயிரும் பறிக்கப்பட்டது.

வேறொரு அறைக்குள் மேரி அலறிக்கொண்டிருந்தாள். ''ஐயோ! என்னைக் காப்பாற்றுங்கோ'' அந்தக் காடையரின் கைகளில் அந்தப் பெண்ணும் சிக்கி, சித்திரவதைப்பட்டாள். அந்த இளம் பெண்ணின் தேகம் நாசமாக்கப்பட்டபின்... அவள் இழுத்து வரப்பட்டாள். வாசலில் வைத்து துப்பாக்கிச் சனியனும் அவள்மீது தன் வெறியைத்தீர்த்தது.

இறுதியாக யோகேஸ்வரியின் மூத்த சகோதரி செந்தில் மணியும் கொடூரமாகக் கொல்லப்பட்டாள். அவளது மகள் கோகுலேஸ்வரியும் அந்த அரக்கர்களிடம் உயிரை இழந்தாள். அவளது சகோதரர்களான பாலமுருகன், யோகராசா இருவருமே ஒன்றாகக் கொல்லப்பட்டார்கள். எல்லாமே முடிந்துவிட்டது.

இறுதியில் வீட்டுக்குத் தீ வைத்தார்கள். பரவிய தீக்கு நடுவில் நேசன், அந்த மனித மிருகங்கள் போகமாட்டாதா எனக் காத்திருந்தான். அவனது தலை தீயில் பொசுங்கத் தொடங்கியது. வெப்பந் தாங்கமுடியாது அவன் வெளியில் ஓடிவந்தான், சுற்றி நின்ற சிங்களச் சிப்பாய்களின் துப்பாக்கிகளுக்கு அவனால் தப்ப இயலவில்லை, அவனது முகம் துப்பாக்கிக் குண்டொன்றினால் சிதைக்கப்பட்டது.

அந்தக் கொலைக் களத்தின் துப்பாக்கி வேட்டுக்கள் அடங்கிற்று. நேற்றைய தினம் இந்த விட்டிலும், இந்த முற்றத்திலும் ஓடி விளையாடிய-சிரித்து மகிழ்ந்த இந்த வீட்டின் பெண்களும், குழந்தைகளும் இன்று - பிணங்களாய் இரத்தச் சகதியில் புதைந்து கிடந்தனர். மரணித்துவிட்ட மனச்சாட்சியின் விளைவுகளினால் இந்த அப்பாவிகள் இன்று அழிக்கப்பட்டு விட்டார்கள்.

அந்த ஊரின் சில இளைஞர்களுடன், உலகநாதனும் எரிந்து முடிந்திருந்த தன் வீட்டுக்குள் நுழைந்தார்.

அங்கே...

அவரது தாய், தங்கை, அன்பு மனைவி, ஆசைக் குழந்தைகள் ......... குரூரமாகக் கொல்லப்பட்டு, இரத்த வெள்ளத்தில் .........

அவரது இதயம் வேதனையால் தவித்தது. இந்த இறப்புக்களினால் அவர் எல்லாவற்றையுமே இழந்துவிட்டதை உணர்ந்து தவித்தார்.

அந்தக் கிராமத்தின் ஒதுக்குப்புற சுடலைக்குள் இரு இளைஞர்கள் அவசரமாக புதைகுழி ஒன்றைத் தோண்டிக்கொண்டிருந்தார்கள். அந்தச் சுடலையை நோக்கி ஆட்களற்ற கிராமத்தின் வீதிகளினால் அந்தப் பதினாறு உடல்களையும் சுமந்து கொண்டு ஒரு மாட்டு வண்டி சென்று கொண்டிருந்தது.

## மலையகம்வாழ்......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது ஏழு தமிழர்கள் தெரிவான மலைநாட்டிலிருந்து 1977 தேர்தல் வரை ஒரு தமிழரும் தெரிவாகவில்லை. 1977ல் மூன்று அங்கத்தவர் தொகுதியான நுவரெலியாவில் இருந்து 3வது பிரதிநிதியாக திரு. எஸ். தொண்டமான் தெரிவானார். இவ்வாறு 1948ல் குடியுரிமை அற்றவர்களாக்கப்பட்ட மலைநாட்டுத் தமிழர் ''நாடற்றவர்'' என முத்திரை குத்தப்பட்டு நாடற்றவர்கள் ஆனார்கள். 1949-ம் ஆண்டு டி. எஸ். சேனநாயக்கா இலங்கைப் பாராளுமன்றத்தில் இலங்கையின் குடிமகனாக இல்லாத யாரும் வாக்காளர் பட்டியலில் இடம்பெற முடியாது என ஒருசட்டத் திருத்தத்தை கொண்டு வந்தார். இதன்மூலம் நாடற்றவராகிய மலையகம் வாழ் தமிழர் வாக்குரிமையையும் இழந்தனர்.

## தமிழீழத்தில்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோப்பூர் இராணுவ முகாம்களையும்.

★ மன்னார் மாவட்டத்தில் கொண்டச்சி இராணுவ முகாமையும் தலைமன்னார் பழைய பாலத்தடியில் அமைந்திருந்த இராணுவ முகாமையும் தாக்கி அம்முகாம்களை முழுமையாகவே கைப்பற்றியிருந்தோம்.

### மூதூரில் நடந்த ஒரு சண்டையில் 40 இராணுவம் பலி

மூதூரில் அருகருகே அமைந்திருந்த காவல் நிலையத்தையும், இராணுவ முகாமையும் எமது வீரர்கள் சூழ்ந்து தாக்கியதைத் தொடர்ந்து இராணுவத்திற்கு உதவியாக சில மைல்களுக்கு அப்பால் உள்ள இறக்கந்தை எனும் இடத்தில் கடற்படைப் படகுகள் மூலம் கொண்டு வந்து இராணுவத்தினர். இறக்கப்பட்டனர்

இந்த சிங்கள இராணுவத்தினரை எமது போராளிகள் சுற்றிவளைத்துத் தாக்கியதில் 40 ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகினர் இவர்களின் ஆயுதங்களையும் கைப்பற்றினோம் ( 1987 இந்தியப் படைகளுடன் சண்டை மூண்ட ஆரம்ப நாட்களில் யாழ் - பல்கலைக்கழக வளவினுள் உலங்கு வானூர்தி மூலம் இறக்கப்பட்ட 30 இந்திய இராணுவ வீரர்களுள் 29 பேர் கொல்லப்பட்டு எஞ்சிய ஒருவரும் கைது செய்யப்பட்டதை இவ்விடத்தில் ஞாபகம் ஊட்டுகின்றோம்)

### கொண்டச்சி முகாம் தாக்குதல், கவசவண்டி கைப்பற்றப்பட்டது.

மன்னார் மாவட்டத்திலுள்ள கொண்டச்சி என்னும் இடத்தில் இருந்த கஜூபாம் இராணுவ முகாம் 21 - 6 - 90 அன்று இரவு எமது வீரர்களினால் தாக்கி வெற்றி கொள்ளப்பட்டது.

இந்த இராணுவ முகாமிலிருந்து சக்திவாய்ந்த ஆயுதங்கள் பலவற்றைக் கைப்பற்றினோம்.

இதில் கவச வண்டி ஒன்றும் அடங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இவ்ராணுவ முகாமானது கஜூவத்தை என்ற சிங்களக் குடியேற்றத் திட்டத்தை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்து)

அத்துடன் குடியேற்ற வாசிகளுக்கு வழங்கப்படவென இராணுவ முகாமில் வைக்கப்பட்டிருந்த 100ற்கும் மேற்பட்ட வேட்டைத் துப்பாக்கிகளும் (சொட்கண்) எம்மால் கைப்பற்றப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிரான், கும்புறுமூலை, களவாஞ்சிக்குடி மற்றும் வடமாகாணத்திலுள்ள மாங்குளம், கிளிநொச்சி, யாழ்-கோட்டை இராணுவ முகாம்களும் எமது பாரிய தாக்குதலுக்கு உள்ளாகி பலத்த சேதத்தை சந்தித்துள்ளன.

இச்சண்டைகளில் 250ற்கும் மேற்பட்ட சிங்களப்படையினர் கொல்லப் பட்டுள்ளனர்.

இந்தச்சண்டைகளில் தோல்வியைத் தழுவிய சிங்களப் படைகள் அப்பாவித் தமிழ்-முஸ்லிம் மக்களைப் படுகொலை செய்யத் தொடங்கியுள்ளார்கள்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள மாதிரிக்கிராமம் ஒன்று சிங்களப் படைகளாலும், சிங்களக் காடையர்களினாலும் அழிக்கப்பட்டுள்ளது. இக்கிராமத்திலிருந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், கிரான், பெரியபோரதீவு மைலங்களுக்கு ஆகிய கிராமங்கள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளன, பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர்.

★ வாழைச்சேனை காகித ஆலையில் அகதிகளாகத் தங்கியிருந்த பெண்கள் சிலர் இவ்விதம் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதுடன் பல பெண்கள் வெண் சுருட்டுக்களால் (சிகரெட்) சுட்டுக்காயப்படுத்தப் பட்டுள்ளனர்.

இதே போன்ற வெறிச் செயல்கள் கிழக்குமாகாணம் முழுவதும் நடந்துள்ளது.

★ திருகோணமலை நகருக்குள் இருந்த தமிழர்களின் வீடுகளும், வியாபார நிலையங்களும் கொள்ளையடித்த பின் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளன.

★ 20 - 6 - 90 அன்று கந்தளாயில் 13 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ இதே தினம் சினன்குடாவில் 14 தமிழர்கள் ரயர் போட்டு உயிருடன் கொழுத்தப் பட்டார்கள்

திருகோணமலை மாவட்டம் பூராவும் தமிழ் இனப்படுகொலைகள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. அங்கிருந்து மக்கள் வடபகுதியை நோக்கி அகதிகளாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழீழம் முழுவதும் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள்.

### முஸ்லீம் மக்கள் பாதிப்பு

இச்சண்டைகளைப் பயன்படுத்தி - முஸ்லீம் மக்களும்-சிங்களப் படைகளினால் இட்டமிட்டுப் பழிவாங்கப்பட்டுள்ளனர். முஸ்லீம் மக்களின் வழிபாட்டுத்தலங்கள், பாடசாலைகள், வீடுகள் தீயிடப்பட்டுள்ளன.

20 - 6 - 90 அன்று ஓட்டமாவடி, நாவலடி ஆகிய இடங்களிலிருந்த பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டுள்ளன.

மூதூரிலுள்ள அன்வறார், அல்கிதா ஆகிய பாடசாலைகள் உடைக்கப்பட்டுள்ளன.

வாழைச்சேனையில் 50ற்கும் மேற்பட்டவீடுகள் தீயிடப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளைநோக்கி விமானங்களிலிருந்தும், கடற்படைக் கப்பல்களிலிருந்தும் குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இதனால் பெருமளவில் உயிரிழப்புக்களும், பொருட்சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

## திருக்கோணமலை .....

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேபாதையில் ஆரியவெவ என்னும் புதுக்கிராமத்தில் (மகாவலி பாலத்துக்கருகாமையில்) மேலும் 300 சிங்களக் குடிகளை அமர்த்தும் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் (1970-1977) புகையிலை உற்பத்திக்கென பல ஆயிரம் ஏக்கர் நிலம் இப்பகுதியில் அரசால் எடுக்கப்பட்டது.

இப்பகுதியில் சிங்களக் குடியேற்றங்களைமேலும்தொடர பல படை முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளது.

(1) கந்தளாய்
(2) கந்தளாய் காவல் நிலையம்
(3) கந்தளாய் சீனித் தொழிற்சாலை
(4) கந்தளாய் சீனி தொழிற்சாலை விசேட அதிரடிப்படை
(5) கந்தளாய் வானொலி நிலையம்
(6) அலலை கந்தளாய்ப் பாலம்
(7) வான சுமத்தரா
(8) கல்லாறு.

www.eelamview.com

www.eelamview.com



# வீர வணக்கம்



கப்டன். அமலன்
அ. அமலதாஸ்
(1966)
காத்தாங்குளம்



கப்டன். புதுமை
பே. குமார்
(05 - 05 - 1970)
பிரவாட்டி அடம்பன்

20 - 05 - 1989 அன்று முள்ளிக்குளம் புளொட் கும்பலின் முகாம் மீதான தாக்குதலின் போது வீரமரணமடைந்த எமது தோழர்களுக்கு.......



கப்டன். சபேசன்
இ- இராசரட்ணம்
(26 - 12 - 1970)
பரிகாரி கண்டல்

புழுதிக் காற்றைக் கலைக்கச் சென்ற
புயலின் கூட்டங்களே! நீங்கள்
முள்ளிக் குளத்தில் மூண்டதோர் போரில்
முன்னின்று சென்றீரே!
சாவும் வாழ்வும் சமமெனக் கொண்டீர்
சரித்திரம் படைத்து விட்டீர் - புலி
பாயும் எதிரிகள் பாசறை யாவும்
பணியும் எனச் செய்தீர்.




கப்டன். குலம்
யோ. ரவி (கிருபா)
(06 - 06 - 1969)
பூநகரி - செல்வபுரம்



லெப். மாக்ஸ்
ஆ. சசிக்குமார்
(05 - 05 - 1970)
தர்சனாமருதமடு



2வது லெப். கர்ணன்
சி. சிவகுமார்
(08 - 09 - 1969)
நல்லூர் - பூநகரி




வீமன்
பி. நிறைஞ்சன்
(10 - 02 - 1971)
சாவற்காடு



லெப். நாயுடு
க. ஜெயசிலன்
(02 - 02 - 1970)
பள்ளக்கமம்



2வது லெப். சுரேஸ்
ஐ. சத்திய சுரேஸ்
(17 - 05 - 1972)
யாழ். திருநெல்வேலி



பீற்றர்
செ. சகாயராஜா
(14 - 10 - 1971)
அடம்பன்



2வது லெப். சிவம்
ஆ. முருகையா
(31 - 05 - 1965)
முருங்கன்

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com